Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | பிலவ | மாசி 23 | ரமழான் 28 | (6-3-62) | செவ்வாய்க்கிழமை | இதழ் 24

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# அதிகப்படியான

## பாடசாலைகள் திருப்பிக்கொடுக்க அமைச்சு முடிவு

கொழும்பு, திங்கள்

**அரசாங்கம்எடுத்த பாடசாலைகளில் சிலவற்றை மீண்டும் அதன் சொந்தக்காரர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்யவிருப்பதாகத் தெரியவருகிறது.**

பாடசாலைத்திட்டம்புதிதாகத் திருப்பி அமைக்கப்படும் பொழுது, ஏற்கனவே அரசாங்கம் எடுத்துக்கொண்ட பாடசாலைகளில் எந்தப் பாடசாலையாவது அதிகப்படியான பாடசாலையாகக் காணப்பட்டால் அந்தப் பாடசாலையை பழையபடி அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து விடுவது என்று கல்விஅமைச்சர் முடிவு செய்துள்ளார்.

அரசாங்கம் எடுத்துக் கொண்ட எந்தப் பாடசாலையும் பாடசாலையாக உபயோகிக்கப்ப வேண்டுமே தவிர வேறு எதற்கும் உபயோகிக்கப்படக் கூடாது என்று, பாடசாலைகள் தரப்படுத்தப்பட்ட பகுதித்தலைவர்களுக்கு வித்தியாதிபதி அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

## ஆசிரிய மாணவர் புதிய சுற்றறிக்கை

கொழும்பு, செவ்வாய்

பயிற்சிபெற்றுவரும் ஆசிரிய மாணவர்கள் இவ்வருடத்திலிருந்து ஒரு மத்திய இறுதிப பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென ஆசிரியகலாசாலைகளின் அதிபர்களுக்கு ஒருசுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய மாணவர்கள் இந்த அறிக்கையைப் பார்வையிட்டார்கள் என்பதுபற்றி உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளார்கள்.

வித்தியாதிபதியின் இந்த அறிக்கை சம்பந்தமாக ஒரு பகுதி ஆசிரியமாணவர்களிடையே கருத்துவேறுபாடு நிலவுவதாகத் தெரிகிறது.

வித்தியாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள மற்றொரு சுற்றறிக்கையில் கண்டிருப்பதாவது:-

தகுதிப்பத்திரங்களை வழங்கும் உரிமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கு இருக்கும். விடைத்தாள்களைக் குறிப்பிட்ட பாடத்தைப்போதித்த விரிவுரையாளர்களே திருத்தவேண்டும். முன்னர் இந்த விரிவுரையாளர்களல்லாதவர்களே விடைத்தாள்களைத் திருத்திவந்தார்கள்என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## “கூட்டுறவு இயக்கம் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும்”

### அமைச்சர் இலங்கரத்தின கருத்து

நுவரெலியா, திங்கள்

“கூட்டுறவு இயக்கத்தினால்தான் சமுதாயத்தில் மக்களிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்கமுடியும்” என்று உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின இன்று காலை இங்கு கிராண்ட் ‘ஹோட்டலில்’ கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான பயிற்சி மகாநாடொன்றை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டுறவு இயக்கங்களினால் மக்கள் பயன்பெறுவதற்குத் தம்மாலான சகல முயற்சியையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று திரு இலங்கரத்தின கூறினர்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை எடுத்துக் கூறிய அமைச்சர் இடைக்காலத்தில் கூட்டுறவு இயக்கம் அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமலும் சிறிதளவு ஆதரவுடனும் வளரவேண்டியேற்பட்டதென்றும் இதனால் கூட்டுறவு இயக்கம் முன்னேற முடியாமல் தடைப்பட்டிருந்ததென்றும் கூறினர்.

## 12 வீடுகள் தீக்கிரை; 50 பேர் வீடிழந்தனர்

சிலாபம், ஞாயிறு

தெதுருஓயாவில் புத்தளம் வீதியில் இருபக்கத்திலுமுள்ள 12 வீடுகள் தீக்கிரையாகிவிட்டன. சுமார் 50 பேர் வீடுகளை இழந்துள்ளனர். தீக்கிரையான ஒரு வீட்டைச்சேர்ந்த திருமதி அலோசியஸ் என்னும் பெண்மணி தீயை அணைப்பதற்காக உதவிகோரி ஓடித்திரிந்த சமயம் வீதியில் சென்ற ஒரு காரினால் மோதப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். மேரிநோனா என்ற மற்றொரு பெண்மணி தீயை அணைக்க முயற்சிசெய்தபோது கையில் முறிவு ஏற்பட்டது. 80 வயது முதியவர் ஒருவர் எரிகாயங்களுடன் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

மகலின்நோனா என்ற பெண் தீயை அணைக்கத் தாம் போராடிக்கொண்டிருந்தசமயம் தனது காதணிகள் களவாடப்பட்டுவிட்டதாக பொலிசாரிடம் புகார்செய்துள்ளார்.

மாவட்ட சாரணர் கமிஷனர் டாக்டர் வி. ஆர் டி சில்வா, அதி வண பிதா ரொபர்ட் மற்றும் பல கத்தோலிக்க குருமார்கள் விரைந்து சென்று உதவியளித்தனர்.

காரியாதிகாரி திரு. ஜீ. பி. ராஜபக்ஷ, கிராமத்தலைமைக்காரர் திரு ஒஸ்டின் பெரேரா ஆகியோர் ஸ்தலத்துக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருளாதார உதவி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தனர். தீ விபத்துப்பற்றி பொலிசார் புலன்விசாரணைசெய்துவருகின்றனர்.

## திருச்சூர் சம்பவம் 30 பேர் கைது

திருவனந்தபுரம், மார்ச் 5

திருச்சூரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கல்வீச்சினால் காயமடைந்த கேரள முதன்மந்திரி திரு. பட்டம் தாணுப்பிள்ளைக்குச் சிகிச்சை அளித்துவரும் டாக்டர்கள் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இக்கல்வீச்சு சம்பவம்பற்றி கேரளசட்டசபையில் உள்விவகார மந்திரி திரு சாக்கோ பேசுகையில் அமைதியான ஆர்ப்பாட்டங்களைத் தடை செய்வது அரசாங்கத்தின் நோக்கமில்லை யென்றும் ஆனால் திருச்சூர் சம்பவம் போன்ற பலாத்கார நிகழ்ச்சிகள் இனிமேலும் நடைபெற அனுமதிக்கப்படமாட்டாதென்றும் தெரிவித்தார்

திருச்சூர் சம்பவம் பற்றிய விசாரணை நடைபெற்றுவருகிறதென்றும் இதுவரை 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் திரு. சாக்கோ தெரிவித்தார்.

## தி. மு. க. அசெம்பிளி கட்சி தலைவர்

### அண்ணாத்துரையின் சூசக தகவல்

தி. மு. க. அசெம்பிளிக் கட்சிக்கு ஸ்ரீ ஆர். நெடுஞ்செளியன் தலைவராக ஆவார் என்று ஸ்ரீ ஸி என். அண்ணாத்துரை இன்று பேசியபொது கூட்டத்தல் சூசகமாகக் குறிப்பிட்டார். ஸ்ரீ கருணாநிதி உப தலைவர் ஆவார் என்றும் தெரிகிறது.

## எம். பி.யின் தலையீடு நல்லதல்ல!

### மாநகரசபையில் மாஜி மேயர் பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

“யாழ்ப்பாண எம். பி. திரு அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண மாநகரசபை அலுவல்களில் தலையிட்டு, மாநகர சபைக்கு அளித்துவரும் உதவி வரவேற்கத்தக்கதாகவில்லை”

இவ்வாறு கூறும் பிரேரணையொன்றை மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் கொண்டு வருவதற்கு முன்னை நாள் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். தாம் சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணையில் திரு. டி. எஸ். துரைராஜா, மாநகரசபைப் “பைல்”களை எம். பி. பார்வையிடுவதற்கு வசதி செய்துகொடுப்பதற்காக மேயர்மீதும் குற்றம் சுமத்தியுள்ளார்.

திரு. பி. எம். ஜோன் கொண்டுவரவிருக்கும் பிரேரணை வருமாறு:—

யாழ்ப்பாண மாநகரசபையில் ஊழியர்களை நியமிப்பதும் நீக்குவதும் மாற்றுவதும் சபையின் அனுமதிபெற்றே செயல்படவேண்டும்.

பெப்ரவரி 19ம் திகதி தொடக்கம் இதுவரை செய்த மாற்றங்கள் எல்லாம் ரத்துச் செய்யப்பட்டு முன்னிருந்த நிலையில் இருக்க வேண்டும். சபையின் நலனைக்கருதி மாற்றங்கள் தேவைப்படின் சபையின் அனுமதி பெற்றே இவ்வித மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

## ஆயூப்கானுக்கு அழைப்பு

கராச்சி, மார்ச் 5

காஷ்மீர் பிரச்சினை குறித்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த பாரதப் பிரதமர் நேரு பாகிஸ்தான் ஜனாதிபதி ஆயூப்கானுக்கு அனுப்பியுள்ள அழைப்பு சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர்.

இந்திய ஸ்தானிகர் திரு. ராஜேஸ்வர தயாள் இந்த அழைப்பை ஜனாதிபதி ஆயூப்கானிடம் சமர்ப்பித்தார்.

## சீதனக் கவலையால் தற்கொலை

### ஏழு பிள்ளைகளின் தாயாரின் பரிதாப முடிவு

#### வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பெண்பிள்ளைகளைப் பெற்றதனால் கவலையடைந்திருந்த தயார், ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார். வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பாக்கியம் (வயது 36) என்பவரே இவ்வாறு செய்துகொண்டார் இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இத்திடீர்மரணம் சம்பந்தமாக திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவரின் மாமியாரான வைத்திலிங்கம் பெண் தங்கம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

இறந்தவரான எனது மருமகளுக்கு 7 பிள்ளைகள் உண்டு இதில் ஆறுபேர் பெண்கள் ஒரு பெண்பிள்ளை விவாகமாகிவிட்டார். இரண்டுபேர் பருவமடைந்தவர்கள் எனது மகன் இரத்தினசிங்கம் அனலைதீவில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். இவர்களின் விவாகமான மூத்தமகளின் சீதனம் இன்னும் கொடுக்கப்படவில்லை இதனால் இறந்தவர் அதிகம் கவலையடைந்திருந்தார்.

ஆறுமாதங்களுக்கு முன்பும் ஒரு பெண்பிள்ளையைப் பெற்றார். இதன்பிறகு இவரது கவலை இப்படியாக இருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை எனது மகன் அனலைதீவில் இருந்தார். பிள்ளைகள் எல்லோரும் பாடசாலைக்கு சென்று

(8ம் பக்கம் பார்க்க)

## மேனன்–கிருபாளினி மனம்விட்டுப் பேசினர்

பம்பாய், மார்ச் 5

வடபம்பாயில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு வி. கே. கிருஷ்ணமேனனும் தோல்வியடைந்த திரு ஆச்சார்ய கிருபாளினியும் தமது தேர்தல் விரோதங்களை மறந்து 15 நிமிடங்கள்வரை நகைப்புறவோடு மனம் விட்டுப் பேசிக்கொண்டனர்.

இவர்கள் தேர்தலைப்பற்றியும் அரசியலைப் பற்றியும் பேசிக்கொள்ளவில்லை யெனத் தெரிகிறது.

# 'வாழ்ந்த வாழ்க்கை போதும் ஐயா!'

## கோர்ட்டில் இளம் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தர்மலிங்கம் ஒரு ரயில்வே கூலி. வாலிப வயதினன். மனைவியும் அவ்விதமே. அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை ஒரு பிள்ளையுடன் முறிவுற்றிருப்பது கவலைக்குரியது. மேலும் குறைந்த சம்பளம் பெறுபவன். குடும்பம் ஒருமித்து வாழ்ந்தால்தான் செலவுக்குப் பணம் போதக்கூடியதாக இருக்கும். கோர்ட்டு இதைக் கவனித்து அவர்களிருவரையும் பிணைத்துவிடவேண்டும்."

இவ்வாறு எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. ஜிம்மி இராஜரத்தினம் யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட்டிடம் கோரினர்.

நீதிமன்றம் தீர்த்தபடி தனது குழந்தைக்கு மாதந்தோறும் பணம்கொடுக்காதுவிட்டதால் 210 ரூபா வருமதியாக இருப்பதால் அதைப் பெற்றுக்கொடுக்கும்படி தர்மலிங்கத்தின் மனைவி லட்சுமி கோரிய வழக்கிலேயே இவ்விதம் கூறப்பட்டது.

லட்சுமியின் வழக்கறிஞரான திரு. ஆர். விசுவநாதன்:- மீண்டும் ஒருமித்து வாழ வழியுண்டு. பிள்ளைக்குக் கொடுக்கும் பணத்தை கொடுக்கவேண்டும். மனைவிக்கும் ஏதாவது கொடுக்கவேண்டும். மனைவியின் அன்பைப்பெறவேணடும். இவற்றை விடுத்து நினைத்த உடன் ஒற்றுமையாகப் போக முடியுமா?

நீதிபதி:- (லட்சுமியிடம்) உனது கனவனுடன் ஒத்து வாழ்ந்தாலென்ன? உனது வாழ்க்கையை ஏன் இவ்வளவில் முறிக்கிறாய்?

லட்சுமி: இந்த வாழ்வு போதும் ஐயா!

நீதிபதி:- (தர்மலிங்கத்திடம்) நீ அந்தப் பக்கம் போ. உனது மனைவியிடம் அன்பாகப் பேசு நல்ல முறையில் வைத்திருப்பதாகப் போய்ச் சொல்லி உன்னுடன் வரும்படி அழை.

உடனே தர்மலிங்கம் மனைவியின் பக்கத்தில் போய் நின்றார்.

லட்சுமி:- இந்தக் கரைச்சல் வேண்டாம் ஐயா.

நீதிபதி:- என்ன கரைச்சல்?

லட்சுமி:- பல கரைச்சல். அடிப்பதும் கூட!

கணவன்:- இல்லை ஐயா! ஒரு நாளாவது அடித்தது கிடையாது.

கணவன் மனைவியைப் பார்த்து:- நான் உனக்கடிக்க மாட்டேன். அன்பாக ஆதரிப்பேன். குறைவில்லாமல் பார்ப்பேன். என்னுடன் வா

மனைவி:- முடியாது. போதும் வாழ்க்கை.

நீதிபதி:- இருவரும் வாலிப வயதுடையவர்கள். ஏனப்பா உங்கள் வாழ்க்கையைக் கெடுக்கிறாய் போ ஒருமித்திரு.

லட்சுமி:- வேண்டாம் ஐயா, இந்த வாழ்க்கை. கலியாண வாழ்க்கையே வேண்டாம்.

நீதிபதி:- அவன் வாழவேண்டும். கலியாண எழுத்தைத்தள்ளுபடி செய்து வேறு விவாகஞ் செய்ய இடங்கொடு.

லட்சுமி:- தேவையான மாதிரிச் செய்யட்டும். மறுப்பில்லை.

நீதிபதி:- கணவனை விட்டவனை விவாகஞ் செய்ய ஒரு ஆணும் வரான். ஆனல் மனைவியை விலத்திய அனுக்குப் பெண் கொடுக்க முன்வருவார்களே!

லட்சுமி:- எனக்குக் கலியாணமே வேண்டாம். வாழ்ந்த வாழ்க்கை போதும். இனி வேண்டாம்.

இறுதியில் தர்மலிங்கம் தனது வழக்கறிஞர் மூலம் 95-00 ரூபா கொடுத்து மிகுதி கொடுப்பதற்கு ஒரு மாதம் தவணை கேட்கவே அது வழங்கப்பட்டது.

### தேவை

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நாளாந்த தேவைகளுக்கு உகந்த பொருள்களை (ஆடை அணிகள், அழகு சாதனங்கள் விளையாட்டுப் பொருள்கள்) விற்பனை செய்யும் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய வயது வந்த **பெண் ஒருவர்** தேவை. முன் அனுபவம் அவசியமல்ல. கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும், பெட்டி எண்X13 c/o ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

### தேவை

சகுதிவாய்ந்த செல்வாக்குள்ள சொந்த ஊரிலேயே வசிப்பவர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தேவை. பருத்தித்துறை, மீசாலை, கொடிகாமம், இணுவில், சுன்னகம், மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை மற்றும் நயினர்தீவு, புங்குடுதீவு முதலான தீவுப்பகுதிகளுக்கும். முதல் கொமிஷன் மாத்திரம் கொடுக்கப்படும் காரியதரிசி, அந்தியகால சகாய நிதிச் சங்கம், 330, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் **கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50.** பல வியாதகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி** ழ்ப்பாணம்.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் சே. மதல்பியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 23-ந் தேதி செவ்வாய்க்கிழமை (6-3-62) மாலை 4-37 வரை அமாவாசை. பகல் 12-53 வரை சதயம். பின் பூரட்டாதி. மரணயோகம். அமாவாசை விரதம். புதியன எதிலும் தலையிடாது தெய்வ வழிபாடு செய்க.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு இவ்வாண்டில் நீண்ட பிரயாணங்கள், இடையிடை உடல்நலக்குறைவுகள், மனப்பயம், முயற்சியில் நட்டம், ஏமாற்றப்படல் ஆகியன காணப்படுகின்றன. நிதானம், பொறுமை அவசியமாகும். நம்பிநடத்தல் ஆகாது சொத்துக்களால் முன்னையிலும் பார்க்க நற்பலன்களும், உத்தியோக பதவி உயர்ச்சிகளும் வித்தை விருத்தியும் உண்டு. பெண்களுக்குத் தனலாபவிருத்தி, ஆபரணதிகள் வரவு, கற்பேறுகள் உறவாயினும் உடல் நிலைமை பேணப்படல் வேண்டும்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: குடும்ப நன்மை, மகிழ்ச்சி.

பரணி: பிரயாணக் கஷ்டம், ஏமாற்றம்.

கார்த்திகை: பெரியோர் நட்பு, மதிப்பு.

ரோகிணி:பிரயாணக்கஷ்டம், ஏமாற்றம்.

மிருகசீரிடம்: நல்லோர் ஆதரவு, தொழில் வெற்றி.

திருவாதிரை: தாயாதி கலகம், பகை.

புனர்பூசம்: குடும்ப சுகம், சுபசெய்தி.

பூசம்: வர்த்தக நன்மை, மதிப்புயர்ச்சி.

ஆயிலியம்: கடும் உழைப்பு, கவலை.

மகம்: ஊழியர் உதவி, தொழில் நலம்.

பூரம்: பெரியவர் பகை, அவசர நடத்தை.

உத்தரம்: வாக்கு வெற்றி, நிம்மதி.

அத்தம்: இழிந்தோர் கூட்டு, மதிப்பு இழப்பு.

சித்திரை: பணவரவு, சுகம்.

சுவாதி: தாயாதி பகை, கவலை.

விசாகம்: குடும்ப சுகம், நற்செய்தி.

அனுஷம்: வித்தைலாபம், பணவரவு.

கேட்டை: உடல் நலக் குறைவு, தொழில் கஷ்டம்.

மூலம்: தொழில்நலம், பணவரவு.

பூராடம்: குடும்ப சச்சரவு, கவலை.

உத்தராடம்:தெய்வவழிபாடு, குடும்ப நன்மை.

திருவோணம்: பணமுடை, மனநிம்மதியீனம்.

அவிட்டம்: சுபசெய்தி, பணவரவு.

சதயம்: நண்பர்பகை, மனக்கவலை.

பூரட்டாதி: பதவியுயர்ச்சி, புகழ்.

உத்தரட்டாதி: நல்லோர் நட்பு, செய்காரிய வெற்றி.

ரேவதி: கடும் உழைப்பு, கவலை.

# மைசூர் அசெம்பிளி காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவி யாருக்கு?

## ஸ்ரீ நிஜலிங்கப்பா- ஸ்ரீ ஜட்டி சம்பாஷணை

மைசூர், மார்ச் 5

மைசூர் மந்திரிசபை அமைப்பு பற்றி பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தலைமையினரைக் கலந்தாலோசிக்கப் போகிறார்கள்.

பிரதேச காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ நிஜலிங்கப்பா, யூனியன் உதவி விவசாய மந்திரி ஸ்ரீ எம். வி. கிருஷ்ணப்பா, முதல் மந்திரி ஸ்ரீ ஜட்டி ஆகியோர் டில்லிக்கு சென்றுள்ளனர்.

புதிய அசெம்பிளி காங்கிரஸ் மெம்பர்கள், மேல்சபை காங்கிரஸ் மெம்பர்களின் கூட்டம் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக மார்ச் 8-ந் திகதி காலை 11 மணிக்குக் கூடும்.

தலைவர்கள் ஆலோசனை கலக்க ஆரம்பித்து விட்டனர். பல்வேறு கோஷ்டிகள் கூடி, தங்களுக்குள் ஆலோசனை நடத்துகின்றன.

முதல் மந்திரி ஸ்ரீ ஜட்டியும், ஸ்ரீ நிஜலிங்கப்பாவும் சந்தித்துப் பேசினர்கள். குமார கிருபாவிருந்தினர் விடுதியில் ஸ்ரீ ஜட்டி ஸ்ரீ நிஜலிங்கப்பாவைச் சந்தித்து 15 நிமிஷ நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

இருவரும் என்ன பேசினர்கள் என்று தெரியவில்லை என்றும் கட்சித் தலைமைப் பதவிக்கு நிற்குமாறு தனது ஆதரவாளர்கள் தம்மை வற்புறுத்துகிறர்கள் என்ற விஷயத்தையும் ஸ்ரீ நிஜலிங்கப்பா ஜட்டியிடம் சொன்னார் என்று தெரிகிறது. எனினும் ஆதரவாளர்களின் இந்த வேண்டுகோள் பற்றி தம் கருத்து என்ன என்பதைப் பற்றிவெளியிடவில்லை என்று தெரிகிறது. நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து யாவருக்கும் திருப்திகரமான ஒரு பரிகாரம் காண உதவிசெய்ய வேண்டுமென்று ஸ்ரீ ஜட்டியை அவர் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஸ்ரீ நிஜலிங்கப்பா காங்கிரஸ் அக்ராசனரைச் சந்திப்பார். ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியுடன் அவர் ஏற்கனவே டெலிபோனில் பேசியுள்ளார். கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுமாறு தனது ஆதரவாளர்கள் வற்புறுத்துகிறர்கள் என்று அக்கிரசனரிடமும் ஸ்ரீ நிஜலிங்கப்பா சொல்லியிருக்கிறர். அவர் நின்றால் மெஜாரிட்டியினர் ஆதரவு அவருக்குக் கிடைக்கும் என்று ஆதரவாளர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

ஆனல், ஸ்ரீ நிஜலிங்கப்பாவின் ஆதரவாளர்கள், இப்போதைய நிலவரத்தில் தலைமையினர் தலையிட்டு சிக்கலைத் தீர்க்க இயலாவிடில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றவர் புது மந்திரிசபை அமைப்பதற்கு அனுமதிப்பதே நலமென்று கருதுகிறர்கள். ஆனல் பெரும்பான்மை என்ற பிரச்சினையில் இருதரப்பாரிடையிலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஆயினும் கட்சியின் நன்மையையும், ராஜ்யத்தின் நலனையும் உத்தேசித்து, பலப் பரீட்சை செய்வதைவிட, நயமாக தகராறுகளைத் தீர்த்துக்கொண்டு நல்லமுறையில் தீர்வு காணப தற்குச செல்வாக்கான சக்திகள் பாடுபடுகின்றன.

டில்லியில் காங்கிரஸ் தலைமையினரிடம் ஸ்ரீ நிஜலிங்கப்பாவும், ஸ்ரீ ஜட்டியும் தத்தம் நிலைமையை எடுத்துரைப்பரென்று தெரிகிறது. இருவரும் காங்கிரஸ் தலைமையினரை வழிகாட்டுமாறு கோருவரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித் தலைவர் தேர்தல் நடந்தேற வேண்டுமென்றும், தங்களுக்கு விருப்பமான தலைவருக்கு வோட்டுப் போடும் உரிமையை இழக்க இயலாதென்றும் ஒரு சாரினர் கூறுகிறர்கள். இந்நிலையில் ஸ்ரீஜட்டி ஆதரவாளரும் வோட்டுக்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்ரீ நிஜலிங்கப்பா எவரையாவது தங்களிடையிலிருந்து நிறுத்தி வைப்பதாகவிருந்தால் அவருடைய ஆதரவாளர்கள் ஏற்பார்களென்றும் சொல்லப்படுகிறது. காங்கிரஸ தலைமையினர் காட்டும் வழியும் செய்யும் முடிவுந்தான் மைசூர் காங்கிரஸ கட்சியினரில் தோன்றியுள்ள இக்கட்டான மனேநிலையை சரிப்படுத்துமென்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

# கேரள கூட்டு மந்திரிசபை மேலும் 3வருடம் பதவி வகிக்கும்

## முதல் மந்திரி விளக்கம்

திருவனந்தபுரம், மார்ச் 5

காங்கிரஸ்- பி. சோ. கூட்டு அரசாங்கம் மேலும் மூன்று வருடங்களுக்குப் பதவியில் இருக்குமென்றும், லோகசபை தேர்தல் முடிவுகள் காரணமாக கூட்டு மந்திரிசபை ராஜினாமாச் செய்யக் கூடும் என்று தெளியான செய்திகள் ஆதாரமற்றவை என்றும் முதல் மந்திரி ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளை கூறினர்.

சட்ட சபையில் காங்கிரஸ்- பி. சோ. கட்சிகளின் ஒன்று சேர்ந்த கூட்டம் நடைபெற்ற பிறகு நிருபர்களிடம் ஸ்ரீ பட்டம் மேற்கண்டவாறு கூறியவாறு கூறினர். கூட்டுமந்திரிசபைதகர்ந்துவிடும்என்றுயாரும்நம்பவேண்டியதில்லை என்று அவர் கூறினர்.

லோகசபைக்கு கேரளாவில் நடைபெற்ற தேர்தலின் முடிவுகளைப் பற்றி கேரளப் பிரதேசக் காங்கிரஸ் நிர்வாக கமிட்டி, சட்ட சபையின் காங்கிரஸ் கட்சி ஆகியவையும், சட்டசபையின் காங்கிரஸ், பி. சோ. கட்சிகளின் ஒன்று சேர்ந்த கூட்டமும் பரிசீலனை செய்தன.

இறுதியான முடிவு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சட்டசபையில் காங்கிரஸ் கட்சித் தலைவரான ஸ்ரீ ஆர். சங்கர் கூறினர்.

காங்கிரஸ் உதவி முதல் மந்திரி ஸ்ரீ ஆர். சங்கர் சிறிது மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். ஜனநாயகத்தில் எதுவும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை என்றும், இரு கட்சியினரும் தமது மேலிடங்களைக் கலந்துகொண்டே முடிவு செய்யலாம் என்றும், சட்டப்படியும், அரசியல் அமைப்புப்படியும், பார்லிமெண்ட் தேர்தல் முடிவுகள் ராஜ்ய அரசாங்கத்தைப் பற்றிய தீர்ப்பாகமாட்டாதென்றும் அவர் கூறினர். ஆகவே மந்திரி சபை ராஜினாமாச் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுவிடவில்லை என்று அவர் கூறினர்.

லோக சபைக்குக் கேரளாவில் 18 ஸ்தானங்களுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. கூட்டு சர்க்கார் அமைத்துள்ள காங்கிரஸ், பி. சோ. கட்சிகளுக்கு இந்தத் தேர்தலில் பெருந் தோல்வி ஏற்பட்டது. 18 ஸ்தானங்களில் 6 ஸ்தானங்களே காங்கிரசுக்குக் கிடைத்தது. பி. சோ. வுக்கு ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்கவில்லை.

பார்லிமெண்ட் தேர்தல்களில் காங்கிரஸ், பி. சோ. கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்விகளைப்பற்றி இரு கம்யூனிஸ்ட் தலைவர்கள் குறிப்பிட்டனர். ஆனல் கூட்டு மந்திரி சபை ராஜினமாச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரவில்லை.

## கஷ்டநிவாரண சங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

மகாத்மாஜி கஷ்டநிவாரண சங்கத்தின் வருடாந்த கூட்டம் அவன் தலைவர் திரு சீ. கிறீஸ்தோபர் தலைமையில் கூடியது.

செயலாளர். தனதிகாரியின் வருடாந்த அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன. பின், சங்கவழர்சியின் அவசியம் மற்றி பலர் உரையாற்றினர்.

ஈற்றில் பின்வரும் நிர்வாகஸ்தர் தெரிவு செய்யப்பெற்றுக் கூட்டம் இனிது நிறைவெறியது.

தலைவர்: கிறிஸ்தோபர். தனதிகாரி: சீ. ரத்தினம். பரிசோதகர்: ஆ. செல்லையா. யோ. றப்பியல். கி. அந்தோனிபிள்ளை. செயலாளர்: திரு க மி நபன்னுத்துரை, உறுப்பினர்: ஆ சின்னத்துரை, ஙி பி அந்தோனிப்பிள்ளை, மி எலியாஸ.

## உடற்பயிற்சி போட்டிகள்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சிப்பகுதிப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் இம் மாதம் 12ம் திகதி திங்களன்று நடைபெற இருக்கின்றன.

நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற இருக்கும் இப்போட்டி கட்கான ஏற்பாடுகளை வித்தியாதரிசி திரு. எம். கேதுசிகாமணி செய்துவருகிறர்.

# பிரெஞ்சு-அல்ஜீரிய இறுதிப் பேச்சுக்கள்

## இவ்வாரம் ஆரம்பமாகும்

### அல்ஜீரியாவில் மேலும் பலாத்கார சம்பவங்கள்

பாரிஸ், மார்ச் 5

**பிரான்சுக்கும் அல்ஜீரிய தேசியவாதிகளுக்குமிடையே இந்த வாரம் இறுதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் 2 தினங்களில் இப்பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடைபெறும்.**

மொராக்கோவிலிருந்து இரு மந்திரிகள் நேற்று பாரிஸ் புறப்பட்டுச் சென்றனர். காவலில் வைக்கப்பட்டிருக்கும் அல்ஜீரிய முஸ்லிம் தலைவர் மகமத் பென்பெல்லாவின் விடுதலை பற்றி அவர்கள் பிரான்சுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரிகிறது.

ஒப்பந்தம் அமுலாகும்போது அல்ஜீரியாவிலும், பிரான்சிலும் பெரும் அளவில் குண்டு வீச்சுகளும், பலாத்காரங்களும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் அல்ஜியாவிலிருந்த 12 நிருபர்களை நாட்டைவிட்டு வெறவியேருவிட்டால், கொன்றுவிடுவதாக பயங்கரவாதிகள் பயமுறுத்தியதன் காரணமாய் அவர்களில் ஒருவரைத் தவிர அனைவரும் வெளியேறிவிட்டதாயும் கூறப்படுகிறது. ஒருவர் மட்டும் துணிந்து கடமையாற்றிவருவதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

மேலும் பிரெஞ்சு துருப்புக்கள் அல்ஜீரியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர். கிழக்கு அல்ஜீரியாவில் நேற்று ஏற்பட்ட பலாத்கார சம்பவத்தில் 2 பேர் பலியாகியதாயும், 14 பேர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் இதுவரை 102 பேர் பலாத்கார சம்பவங்களுக்கு பலியாகியிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## அரசியல்கட்சிதலைவர்களுடன் ஜெனரல்நேவின் சம்பாஷணை

ரங்கூன், மார்ச் 5

**பர்மிய அரசாங்கத்தைக் கைப்பற்றியுள்ள ஜெனரல் நேவின் நாட்டிலுள்ள முக்கிய அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். பிரதமர் ஊநூவின் கட்சி, பாஸிஸ எதிர்ப்புக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சித் தலைவர்களுடன் அவர் சம்பாஷணை நடத்தினார்.**

நாட்டில் அமைதியை நிலைநாட்டும் முயற்சி பற்றி அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. புதிய ஆட்சியில் அரசியல் கட்சிகள் இயங்குவது பற்றியும் விவாதிக்கப்பட்டதாம்.

ஷான், கரன், கச்சின், கயா ஆகிய ராஜ்யங்களிலுள்ள தற்போதைய சபையை புரட்சி அரசாங்கம் கலைத்து, ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் ராஜ்ய உயர்தர சபை ஒன்றை நியமித்திருக்கிறது. இச்சபை ஒவ்வொன்றிலும் ஒரு ராணுவ அதிகாரியைத்தவிர மற்ற அங்கத்தினர்கள் சிவிலியன்களாகும். சபையின் தலைவரும் ஒரு சிவிலியனாக இருப்பார்.

## கேரள முதன்மந்திரி மீது கல் வீச்சு

### திருச்சூரில் சம்பவம்

திருவனந்தபுரம், மார்ச் 5

கேரள முதன் மந்திரி திரு. பட்டம் தாணுப்பிள்ளை, திருச்சியில் ஒரு கலைவிழாவில் பங்கெடுத்துக் கொள்ளச் சென்றபோது அவருக்கெதிராக 500 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர். கற்கள் வீசப்பட்டன. கூட்டத்திலிருந்து ஒருவர் வீசிய கல், முதன் மந்திரியைத் தாக்கியதால் அவர் காயமடைந்தார். உடனே டாக்டர்கள் அவரைச் சோதனை செய்ததில் ஜுரம் கண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது. முதன் மந்திரிக்கு முழு ஓய்வு தேவையென டாக்டர்கள் அறிவித்தனர். அவருடன் காரில் சென்ற ஸ்ரீமதி தாணுப்பிள்ளைக்குக் காயம் ஏற்படவில்லை.

## லிஸ்பனில் அரசியல் கைதிகள் சித்திரவதை

லிஸ்பன், மார்ச் 5

போர்த்துக்கலில் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் கொடுமையாக நடத்தப்படுகிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. ஹோட்டல் ஊழியர்களாகவும் டாக்ஸி சாரதிகளாகவும் எங்கு பார்த்தாலும் இரகசியப் பொலிசார் நிறைந்து காணப்படுகின்றனராம்.

லிஸ்பனில் உள்ள 2 சிறைச்சாலைகளில் 1000-க்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டுவருவதாயும் கூறப்படுகிறது.

சுவர் ஓரமாக கைதி ஒருவர் இராப் பகலாக 7 நாட்களுக்கு நிற்கவைக்கப்படுவதாயும், இதன் காரணமாக காலில் வீக்கங்கண்டு அவர் விழுந்தால், மீண்டும் எழுந்து நிற்கும்வரை அவர் உதைக்கப்படுவதாயும் கூறப்படுகிறது.

## லண்டனில் இந்திய தம்பதிகள் மரணம்

லண்டன், மார்ச் 5

இந்தியாவைச்சேர்ந்த இளம் தம்பதிகள் ஸ்ரீ ஹைஸர்நாத்தும், அவரது மனைவி லீலாவும் இங்குள்ள ஒரு ஹோட்டலில் துப்பாக்கியால் சுடப்பட்டு மாண்டு கிடந்தனர். தம்பதிகளின் சடலங்களுக்கருகே கைத்துப்பாக்கி ஒன்று காணப்பட்டதாம்.

அவ்விருவரும் தங்கள் குழந்தைகளுடன் யு. எஸ். செல்வதற்காக, பெப். 22-ம் திகதியன்று இங்கு வந்தார்கள். லீலாவின் தந்தை இங்கு ஹைகமிஷன் காரியாலயத்தில் வேலை பார்க்கிறார். இவ்விரு குழந்தைகளும் தற்போது அவருடைய பாதுகாப்பில் உள்ளன.

## வேலூர் ஆஸ்பத்திரிக்கு லண்டன்நண்பர்கள் சங்கம் உதவி

சென்னை, மார்ச் 5

வேலூர் வைத்தியக் கல்லூரி, ஆஸ்பத்திரி ஆகியவற்றின் வளர்ச்சிக்காக சென்ற இரண்டு ஆண்டுகளில் லண்டனில் உள்ள வேலூர் நண்பர்கள் சங்கம் ரூபா 23 லட்சம் திரட்டியிருக்கிறது.

சங்கத்தின் பொதுஜன தொடர்பு அதிகாரி ஸ்ரீ ஏ. ஜி. ஜெப்கோட் இத்தகவலை நிருபர்களிடம் அறிவித்தார். ஐரோப்பா கண்டத்திலுள்ள சிலர் உட்பட 10,000 பேர் இந்த சங்கத்தில் மெம்பர்களாகியிருக்கின்றனர். ஆசியாவிலேயே சிறந்த ஸ்தாபனமாக வேலூர் ஆஸ்பத்திரியை அவர்கள் மதிக்கின்றனர் என்றும் அதற்கு தாராளமாக நன்கொடை அளிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் ஒருமாதம் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டுள்ள ஸ்ரீ ஜெப்கோட் வேலூர் ஆஸ்பத்திரியின் முன்னேற்றத்தைத் தெரிந்து கொள்வதற்காக அங்கு சமீபத்தில் சென்றிருந்தார். ஆஸ்பத்திரி சிப்பந்திகளிடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுவதைக் கண்டதாகவும் அந்த ஆஸ்பத்திரியைப்பற்றி நல்ல எண்ணங்களுடன் தாம் திரும்பிச் செல்வதாகவும் அவர் கூறினார்.

## பருத்தித்துறை இ. போ. ச டிப்போ

பருத்தித்துறை, திங்கள்

இறங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் சேவை செய்யும் சாரதிகள், அங்குள்ள பஸ்கள் சேவைக்குலாயக்கற்றதென கூறி வேலைக்கு வந்தும் வேலைசெய்யாது இருக்கின்றனர்.

நாள் தோறும் நல்லநிலைமையில் உள்ளதென கூறப்படும் பத்துப்பஸ்களிரண்டு பஸ்கள் மாத்திரமே பலபாதைகளிலும் சேவை செய்வதால் பிரயாணிகள் பெரும் அசௌகரியங்கட்கு ஆளாகி உள்ளனர்.

நிலைமை சமீபத்தில் சீரடையும் என நம்புவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

## ஆசிரியருக்கு உபசாரவிருந்து

பருத்தித்துறை, திங்கள்

அகில இலங்கை ஆசிரியர் சங்கஉபதலைவராக தெரிவு செய்யப்பட்ட புலோலி இந்து ஆங்கிலக்கல்லூரி ஆசிரியர் திரு. வி. தம்பிப்பிள்ளைக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் உபசார விருந்தொன்றளித்து கௌரவித்தனர்.

## தாராசிங் ராஷ்டிரபதியை சந்தித்தார்

### ஸர் ஹாலி தொகுதியில் மீண்டும் தேர்தல் நடத்த வற்புறுத்து

புதுடில்லி, மார்ச் 5

அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரசாத்தைச் சந்தித்து பஞ்சாப் முதல்மந்திரி ஸ்ரீ கெய்ரோன் 34மெஜாரிட்டி வோட்டுகளில் வெற்றி பெற்ற ஸர்ஹாலி தொகுதியில் மறு வாக்குப் பதிவு நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினார்.

இந்த விஷயமாகத் தாம் பிரதம தேர்தல் கமிஷனரிடம் கொடுத்த நகலை தாராசிங் ராஷ்டிரபதியிடம் கொடுத்தார்.

மாஸ்டர் தாராசிங் தமது மருமகன் ஸ்ரீ தலப்சிங்குடன் ராஷ்டிரபதியைச் சந்தித்து 20 நிமிஷம் பேசினார். அவர் தமது கட்சியை விவரமாக ராஷ்டிரபதியிடம் எடுத்துக் கூறினார்.

மாஸ்டர் தாராசிங் ராஷ்டிரபதியைச் சந்திப்பதற்கு முன்பு பிரதம தேர்தல் கமிஷனரைச் சந்தித்து, ஸர்ஹாலி தொகுதியில் வாக்குபபதிவு நடைபெற்றுவந்ததை நேரில் பார்த்த பலரின் எழுத்து மூலமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்.

முதல் மந்திரி ஸ்ரீ பிரதாப் சிங் கெய்ரோன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸர்ஹாலி தொகுதியில் மறு-வாக்குப் பதிவு சாத்தியமில்லையென்று விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகின்றது. மாஸ்டர் தாராசிங் தலைமையில் எதிர்க்கட்சிகள் கோஷ்டி ஒன்று பிரதம தேர்தல் கமிஷனர் ஸ்ரீ கே. வி. கே. சுந்தரத்தைப் பேட்டிகண்டு, மறுவாக்கெடுப்பு நடத்தக் கோரியது.

குறிப்பான புகார்களைத் தெரிவித்து பிரமாண மனு ஒன்றை சமர்ப்பிக்கும்படி தேர்தல் கமிஷனர் கேட்டதாகத் தெரிகிறது.

மாஸ்டர் தாராசிங்கின் தூதுகோஷ்டியில் ஸ்ரீ உத்தம் சிங் நாகோக்(சுதந்திராக்கட்சி) ஸ்ரீ ஹரீப் கிருஷ்ணசுரீத் (கம்), ஸ்ரீ கிருபால்சிங் (பி. சோ) ஸ்ரீ ஹர்பான்ஸ்சிங் குஜ்ரால் (அகாலி தளசட்ட ஆலோசகர்) வந்திருந்தனர். ஸர்ஹாலி தொகுதியில் நடந்த வோட்டு எண்ணிக்கையில் காணப்பட்ட ஊழல்களைப்பற்றி மகஜரொன்றைச் சமர்ப்பித்தனர்.

மாஸ்டர் தாராசிங் இப்பேட்டிக்குப் பிறகு நிருபர்களை சந்தித்தார். "தேர்தல் கமிஷனர் இவ்விவகாரத்தை கவனித்து வருகிறார். ஸர்ஹாலியில் வோட்டுச் சீட்டுகள் ஸீல் வைக்கப்படாமல் விடப்பட்டதாலும், முதல்வோட்டுஎண்ணலுக்கும் இப்போதைக்குமிடையில் நாட்கள் பல கழிந்துவிட்டதாலும், மறுபடி வோட்டுகளை எண்ணுவதில் அர்த்தமில்லை. ஜனநாயகத்தின் கலையை முன்விட்டு புதிதாக வாக்குப் பதிவு நடத்துவது அவசியமாகும் என்று டாக்டர் தாராசிங் கூறினார்.

## ஆபிரிக்க இனத்துக்கு மெஜாரிட்டி கூடாதாம்

### ரொடீஷிய வெள்ளையர் கெடுபிடி

லண்டன், மார்ச் 5

வடரொடீஷிய சட்டசபையில் ஆபிரிக்கருக்கு மெஜாரிட்டி கிடைக்கச்செய்வதற்கான பிரிட்டிஷ் அரசியல் சீர்திருத்ததிட்டத்தைகாமன்ஸ சபையில் காலனி மந்திரி திரு மாட்ளிங் சமர்ப்பித்தார்.

ரொடீஷியா பெடரேஷன் பிரதமர் வெலன்ஸ்கியின் மிரட்டல் உருட்டல்களுக்குப் பயந்து இத்திட்டத்தை இந்தத் தடவையாவது பிரிட்டன் வாபஸ் பெறுமல் இருக்குமா என்று தொழிற்கட்சியினர் கேட்டார்கள்.

பெடரேஷனில் உள்ள மூன்று உறுப்புகளில் நயாஸாலாந்து சட்டசபையில் ஆபிரிக்கருக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. தென் ரொடீஷியா, வடரொடீஷியா ஆகிய இரண்டிலும் அதேமாதிரிச் செய்வது பிரிட்டிஷ் திட்டத்தின் நோக்கம்.

ரொடீஷியப் பிரதமர் வெலன்ஸ்கி யாரும் அழைக்காமலேயே திடீரென செவ்வாய்க்கிழமை லண்டனுக்கு வந்துவிட்டார். புதிய திட்டம் உருவாகாதபடி அடிப்பது அவரது விஜயத்தின் நோக்கம். முன்னர் இருமுறை இவ்விஷயமாக முடிவு செய்து பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவிக்கவிருந்த தருணம் பார்த்து அவர் குறுக்கிட்டு ஒன்றும் நடைபெற வொட்டாமற் செய்துவிட்டார்.

மூன்று உறுப்புக்களிலும் ஆபிரிக்க மெஜாரிட்டி ஏற்பட்டு விட்டால், பெடரேஷன் உருக்குலைந்து போகும் மூன்றிலும் குடியேறியுள்ள ஆங்கிலேயர் நிராதரவாகி விடுவர் என்பது புதுத்திட்டத்துக்கு எதிரான அவரது வாதம் பெடரேஷன் குலைந்து போகாமல் தடுப்பதற்கு பலாத்காரம் உட்பட அவசியமான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலா மென்று வெலன்ஸ்கியின் மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார்.

புதிய சட்டசபை 45 பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்கும். 15 பேரை வெள்ளையரும் 15 பேரை ஆபிரிக்கரும் தனித் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுப்பர். மீதமுள்ள 15 பேரை பொதுத்தொகுதியாக விருத்து எல்லோரும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் பிரேரணை. இதற்கு நிபந்தனை போட பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. ஆனால் நிபந்தனையற்றிருந்தால் ஆபிரிக்க மெஜாரிட்டிஉறுதிப்பட்டுவிடுமென்று கருதுகிறார் வெலன்ஸ்கி.

400 ஆபிரிக்க வோட்டுகள் கிடைத்தால் ஒரு வெள்ளையர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படவேண்டும். ஆனால் ஆபிரிக்க அபேட்சகர் ஜெயிப்பதற்கு குறைந்தபட்சம் பன்னிரண்டரை வீதம் வெள்ளைக்கார வோட்டுக்களைப் பெறுகவேண்டும் என்ற ஒரு பழைய பிரேரணையை உயிர்ப்பிக்க விரும்புகிறார் வெலன்ஸ்கி. இதை ஆபிரிக்கர் கடுமையாக எதிர்க்கின்றனர்.

## பிரதமருக்கு கென்னடி நன்றி

கொழும்பு, திங்கள்

கர்னல்ஜோன்கிளனின்வான வெளிப்பிரயாண வெற்றியை பாராட்டி திருமதி பண்டாரநாயகா அனுப்பிய செய்திக்கு ஜனாதிபதி கென்னடி நன்றி தெரிவித்திருக்கிறார்.

### மணி வாக்கு

'நமது பக்கம் உண்மையிருப்பது வேறு. நாம் உண்மையின் பக்கத்தில் இருக்க விரும்புவது வேறு.'


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி மீ 22 உ (6-3-62)


## பர்மிய புரட்சி

பர்மாவில் ஏற்பட்டுள்ள திடீர் இராணுவப் புரட்சி பலரையும் திடுக்கிடச் செய்துள்ளது இம்முக்கிய விஷயம் பற்றி இந்தியப் பிரதமர் நேருஜியும் இதுவரை எதுவும் கூறவில்லை. இதற்கான காரணங்களைப் பற்றிய பூரண விவரங்கள் தெரியாதவரை, இது குறித்து திட்டமாக யாரும் எதுவும் கூறுவதற்கில்லை. என்றாலும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஆசிய நாடுகளில் ஒன்றான பர்மாவில் ஜனநாயகத்துக்கு இவ்வித முட்டுக்கட்டை ஏற்பட நேரிட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

இராணுவப் புரட்சி அரசாங்கத்தின் தலைவர்களாகவுள்ள ஜெனரல் நீவின் வெளியிட்ட ஓர் அறிக்கையில், நாட்டு நிலைமை கவலைப்படக்கூடிய அளவுக்கு மோசமடைந்துள்ளதாயும் அது மேலும் மோசமாகாமல் இருப்பதற்காகவே இந் நடவடிக்கை எடுக்க நேரிட்டதென்றும் சமாதானம் கூறுகின்றார். ஜெனரல் நீவின் ஏற்கனவே சிலகாலம் பர்மியப் பார்லிமெண்டின் அனுமதியின் மீது ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தியவர். பிரதமர் ஊநூவுடன் சீக்கிரத்தில் அவர் புதுடில்லிக்கு நேருஜியின் அழைப்பின்மீது வருவதாகவுமிருந்தது. பதவி ஆசையால் மட்டும் உந்தப்பட்டிருந்தால், ஜெனரல் நீவின், ஏற்கனவே தம் கையிலிருந்த ஆட்சியை மீண்டும் பார்லிமெண்டிடம் ஒப்புவிக்க மறுத்துமிருக்கலாம். ஆனால் அச்சமயம் அவர் அப்படிச் செய்யாதது குறிப்பிடத்தக்கது.

பிரதம மந்திரி ஊநூ பௌத்த சமயத்தை அரசாங்க மயமாக்க எடுத்த நடவடிக்கை இராணுவத்தினரிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியதென்றும் இராணுவத்தில் வேறு மதத்தவருமிருப்பதாயும் புரட்சிக்கு அது முக்கியமானதோர் காரணமென்றும் விஷயமறிந்த இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக ரங்கூனிலிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது. இதுதவிர வேறு சில காரணங்களும் சொல்லப்படுகின்றன. பல சமயத்தவரும் கலந்து வாழும் ஒரு நாட்டிலே, ஒரு சமயத்தை மட்டும் அரசாங்க சமயமாக்குவது, மற்றவர்களை இரண்டாம் பட்ச பிரஜைகளாக ஆக்குவதாகுமெனும் மனக்கசப்புக்கு இடமேற்படுத்தும் என்று மதித்தே இந்தியாவில் அரசாங்கம் சமயச் சார்பற்றதாக இருந்து வருகின்றது. நேருஜியின் அரசாங்கம் கைக்கொள்ளும் இந்தக் கொள்கை மற்றவர்களுக்கும் நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டும்

சமீபத்தில் புதுடில்லியிலே உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், இலங்கைப் பத்திரிகைத் தூதுகோஷ்டிக்குப் பேட்டியளித்துப் பேசுகையில் எல்லாச் சமயங்களிலேயும் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தினர். மதங்களுக்குப் பதில், எல்லாருக்கும் பொதுவான ஆதமீகத்தையே வற்புறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டதென்று விநோபாபாவே கூறியதைப் பிரதமர் நேருஜியும் பன்முறை ஆமோதித்துள்ளார். நல்ல அனுபவமும் தீர்க்கதரிசனமும் வாய்ந்த தலைவர்கள் உள்ளதாலேயே இந்தியாவில் அரசாங்கம் ஸ்திரமாக இருந்து நாடு அமைதியாக ஜனநாயக பாதையில் முன்னேற முடிகின்றது. இவ்வித விஷயங்களில் இந்தியாவின் முன்மாதிரியைப் பின்பற்றுவது பர்மாவுள்ளிட்டு புதிதாகச் சுதந்திரமடைந்த ஆசிய நாடுகளுக்கு அதிக பாத்திரமானதாகும்.

# தமிழ்-சிங்கள தொழிலாளர் புதிய ஒற்றுமை

## தார்மீகப் புனருத்தாரண இயக்கத்தின் சேவை

தமிழ் — சிங்கள நட்புறவுக்குப் புதிய வழி பிறந்து வருவதைச் சமீபத்தில் தேயிலைத் தோட்டமொன்றில் நடைபெற்ற கூட்டமொன்று பிரதிபலித்துக் காட்டியுள்ளது. பித்தக்கந்தைக் கோவில் சமிட்டியின் அழைப்பின் பேரில் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தினர் அங்கு சென்றபோது இக் கூட்டம் நடைபெற்றது.

தார்மீக புனருத்தாரண சபையினர் தமது கொள்கைகளைத் தோட்டப் பகுதிகளில் பரப்பியும் தோட்ட நிர்வாகங்களில் கடைப்பிடித்தும் வருவதைக் காண்பதற்கும் துறைமுகத் தொழிலாளர் பெரிதும் விரும்பினர். இதன் பிரதிபலிப்பே கோவில் கமிட்டியின் அழைப்பு.

சமீபத்தில் பித்தக்கந்தை தோட்டத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் துறைமுகத் தொழிற் சங்கங்களின் தலைவர்கள் மூவர் உட்பட 7 சிங்களவர் தமிழ்த் தொழிலாளரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.

### அனைவருக்கும் நன்மை

துறைமுக முன்னேற்றத் தொழிலாளர் யூனியனின் தலைவர் திரு. ஆர். எச். ஜயசேகரா பேசுகையில் கூறியதாவது:-

தோட்டத் தொழிலாளர்களின் லயன்களுக்கு நான் பல தடவை சென்றிருக்கின்றேன். தோட்டங்களில் தொழிலாளர் லயன்கள் மாட்டுக் கொட்டில்கள்போல் காட்சியளித்தன. ஆனால் இந்தத் தோட்டத்தில் தொழிலாளர் லயன்கள் சிறந்த நிலைமையில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு உங்களது அதிகாரியை நான் மெச்சுகின்றேன். தொழிலாளர் நிலைமைகளைச் சீர்படுத்த நம்முள் பலர் அதிகம் முயன்ற போதும் இங்குள்ள நிலைமை போல எங்கும் நாம் காணமுடியவில்லை. தார்மீக புனருத்தாரண சபையின் மூலமாக தொழிலாளருக்கும் நாடு முழுவதுக்குமே அதிகம் நன்மை செய்யலாம்.

தொழிலாளராகிய உங்களுடைய வீடுகளில் சிலவற்றுக்கு நான் சென்றுள்ளேன். "உங்களுடைய அதிகாரி எப்படியானவர்?" என்று கேட்டபோது நீங்கள் அளித்த பதில் மகிழ்ச்சி கொடுத்தது. "அவர் எங்கள் அதிகாரி மட்டுமல்ல. அவர் எங்களுக்குத் தந்தையும் போன்றவர்" எனக் கூறினீர்கள். தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே அரசியல் கட்சிகள்கூட ஏற்படுத்தமுடியாத உறவை தார்மீக புனருத்தாரண இயக்கம் ஏற்படுத்த உதவியுள்ளது

### மனிதனை மதித்தல்

உங்களுடைய முதலாளியே உங்கள் கூட்டத்துக்குத் தலைமைதாங்குவது உங்களுக்கே ஆச்சரியம் தரும் விஷயம். ஒரு மனிதன் மாறிவிட்டால் எத்தனையோ விஷயங்களைச் சாதித்துவிடலாம். உங்களது முதலாளியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் நீங்கள் ஒன்றாக உழைத்து வருகிறீர்கள். முதலாளியும் தொழிலாளரும் அனைவரையும் மனிதனை மதித்தால் அவர்கள் ஒன்றாக உழைக்கலாம். இந்த நிலைமை எல்லாத் தோட்டங்களிலும் ஏற்படவேண்டும் என நான் விரும்புகிறேன். தார்மீக புனருத்தாரண இயக்கம் பற்றிச் சகலரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

துறைமுகக் கமிஷன் பேசிய தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஜி. நோபேர்ட் சில்வா பேசுகையில் கூறியதாவது:-

"இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்த தார்மீக புனருத்தாரண சபைக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். 1958-ல் ஏற்பட்ட கலகங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. நான் செய்த தவறுகள் சிலவற்றுக்கு மன்னிப்புக் கோர விரும்புகிறேன். தோட்டத் தொழிலாளராகிய நீங்கள் உற்பத்தி செய்யும் தேயிலையைத் துறைமுகத்தில் எமது தொழிலாளரே ஏற்றுமதி செய்கிறார்கள். ஒரே சேவையில் ஈடுபட்டுள்ள நாம் ஒருவரையொருவர் தெரியாமல் இருக்கிறோம். அதனாலே நம்மிடையே பிளவு இருந்து வருகிறது. சத்தியம், தூய்மை, பொதுநலம், அன்பு ஆகிய நான்கு தர்மக் கொள்கைகளையும் தார்மீக புனருத்தாரண சபை எமக்கு உணர்த்தியுள்ளது. என் தவறுகளை நானே உணரவில்லை, ஏனையவர்களது குற்றங்களில் எப்பொழுதும் கண்ணாக இருந்தேன். ஆனால் புனருத்தாரண இயக்கம் என் தவறுகளை நானே உணர்ந்து கொள்ள வைத்தது. இரு குழந்தைகளுக்குத் தந்தையான நான் குடித்துவிட்டு மனைவிக்கும் குழந்தைகளுக்கும் கஷ்டம் கொடுத்தால் தொழிலாளர் சங்கத்தை எவ்வாறு சரியாக நடத்த முடியும்? எனக்குப் புலப்படாது என்னிடமிருந்து வந்த தவறுகளைத் தார்மீக புனருத்தாரண இயக்கம் எடுத்துக் காட்டியது. என்னைத் திருத்திக்கொண்டு பிறரை இப்போது திருத்த முயல்கிறேன். 'உன்னை மாற்றிக்கொள், பின் பிறரையும் மாற்றிவிடு, அதன் பின நாட்டை மாற்று. பின்னர் உலகத்தையே மாற்றி விடு'- இதுவே தார்மீக புனருத்தாரண சபையின் கொள்கை"

### அன்பு வேண்டும்

துறைமுக அரசாங்க சேவையாளர் சங்கத் தலைவர் திரு. வீரசிங்கா பேசுகையில் கூறியதாவது:-

"இனவேற்றுமை, மதவேற்றுமைகளால் எமது நாடு பெரிய கஷ்டங்களுக்குள்ளாகியது. தார்மீக புனருத்தாரண சபை அறிவுறுத்தும் முதல் பாடம் 'அன்பு' என்னும் கர்மக் கொள்கை. 1946-ல் துறைமுகத்தில் இரண்டு யூனியன்கள். மட்டுமே இருந்தன. யூனியன்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகளால் தொழிலாளர்களின் இயக்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தார்மீக புனருத்தாரண சபையின் முயற்சியால் எமது தலைவர்கள் சிலர் ஒன்று சேர்ந்துள்ளார்கள். 1946-ல் இருந்த ஒற்றுமைகளைத் திரும்பவும் ஏற்படுத்த இவர்கள் முயன்று வருகிறார்கள்

தோட்டத் தமிழர் சம்பிரதாய முறைப்படி சந்தனம், பூமாலை தீபத்துடன் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தினரை வரவேற்றனர். தார்மீக புனருத்தாரண சபை படக் காட்சிகளைச் சிங்களத்தில் ஆக்குவதற்கெனத் தோட்டத் தமிழர் பணம் சேர்த்துக் கொடுத்தனர்.

தமிழருக்குத் தீங்குசெய்த சிங்கள மக்கள் சிங்களப் படம் தயாரிப்பதற்கும் தமிழர் பணம் வழங்குவதைப் பார்த்துப் பெரிதும் வியப்படைகின்றேன். சில காலத்துக்கு முன்னர் நடந்த வைகளையிட்டு நான் பெரிதும் கவலைப்படுகிறேன். தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே தார்மீகப் புனருத்தாரண சபை மூலமாக உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்த நான் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிக்கத் தீர்மானித்துவிட்டேன். சகோதர சகோதரிகள்போல நாம ஒன்றாக வாழ்ந்து எமது நாட்டின் நலனுக்காக உழைக்கவேண்டும்."

### புத்தர் போதனை

இக்கூட்டத்துக்கு மூன்று பௌத்த பிக்குகள் அழைக்கப்பட்டிருந்தனர். ஸ்ரீ சமங்கல ராமயாவைச் சேர்ந்த வண தர்மஜோதி நாயக்கதேரோ தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

இலங்கை மக்களிடையே பல பிளவுகள் காணப்படுவது வருத்தத்துக்குரியது. மக்களிடையே இந்தப் பிரிவுகள் இருப்பது தவறு எனப் புத்த பகவான் போதித்துள்ளார். சிறு பிராணிகளிடத்துத்தொடக்கம் பெரியோர்கள்வரை நாம் அன்பு காட்ட வேண்டும் என 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் உபதேசித்ததை இன்றுகூட நாம் கடைப்பிடித்து வராதது மிகவும் கவலைக்குரிய விஷயம். புத்தபகவானின் புனித மொழியான 'அன்பு'—'உலக அன்பு' என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உலகம் முழுவதையும் நாம் ஒன்று சேர்க்க வேண்டும். அதற்கு முன்னர் சிங்களவர் தமிழர் ஏனைய இனத்தவர்கள் யாவரும் சகோதரர்கள் போல இந்த நாட்டில் வாழ வேண்டும். நாட்டில் எல்லாப் பகுதிகளிலேயும் ஒற்றுமையும் நல்லுறவும் நிலவ வேண்டும்.

தர்மேஸ்வரநாயக்க தேரோ கூட்டத்தின் முடிவில் பேசுகையில் கூறியதாவது:

இந்தப் பூவுலகத்தை தேவ உலகமாக மாற்றலாம். அதற்கு நாம் ஒன்றுசேர வேண்டும். நாம் ஒவ்வொரு தோட்டத்துக்கும் செல்வோம். ஒவ்வொரு ஆங்கிலத் துரையிடமும் செல்வோம். எந்தச்சாதியினருடனும் பழகுவோம். இதற்கு இன்று வழிகாட்டப்பட்டுள்ளது. இன்றைபதினம் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்தது. இன்று தொடக்கமாக உலக சமாதானப் பாதையில் நாம் சென்று கொள்ளலாம்.

## மத்திய தங்க சேமிப்பின் கூடிய அதிகரிப்பு

லண்டன், மார்ச் 5

ஸ்டர்லிங் பகுதியின் மத்திய தங்கமும், மாற்றக்கூடிய கரன்ஸி சேமிப்பும், பெப்ரவரி மாதம் 5,000,000 பவுண்கள் கூடியிருந்தது பெப்ரவரி 28-ந் திகதியன்று இதன் தொகை 1,223 லட்சபவுண்களாக கூடியிருந்ததென்று திறைசேரி தெரிவித்தது.

பிரிட்டன் பெப்ரவரி மாதம் அகில உலகக் குழுவுடன் ஆகஸ்டில் வாங்கிய 535,000,000 பவுண்களில் 75,000,0000 பவுண்களைத் திருப்பிக்கொடுத்தது. ஏழு மாதத்திற்குள் அரைவாசிக்கடனைக் கொடுத்துவிட்டது.

## ஐயாறன் எழுதுவது

புதிய கவனர் ஜெனரல் திரு. கோபல்லவா, கண்டியிலே புத்தரின் புனித தந்தத்தைத் தரிசித்தபின் பிள்ளையார் கோவிலுக்கும், பின்னர் மகா விஷ்ணு தேவாலயத்துக்கும் சென்று வழிபட்டிருக்கிறார். பிள்ளையார் கோவிலில் சுவாமி சச்சிதானந்தரும் வேறு பலரும் இருந்து கவர்னர் ஜெனரலை வரவேற்றுள்ளனர். பௌத்தரான திரு. கோபல்லவா, தமது குடும்பத்துடனே பிள்ளையார் கோவிலுக்கும் மகாவிஷ்ணு தேவாலயத்துக்கும் சென்று பக்தியுடன் வழிபட்ட செய்தியைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. இந்து-பௌத்த ஒற்றுமைக்கு இதைவிட வேறு நல்ல அத்தாட்சி வேண்டுமா?

இதே போல் எல்லா மதங்களிடையேயும் ஒற்றுமை ஏற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஒன்றே தெய்வம் என்று நம்பும் மக்களெல்லாம், அத்தெய்வத்தின் பெயரால் ஏன் ஒன்றுபடமுடியாது? அவ்வித சர்வசமய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படக் கூடிய வகையில் உதவி செய்பவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் மிக நல்ல கைங்கரியம் செய்பவர்களாவார்கள்.

* * *

பிள்ளையார் கோவிலில் சுவாமி சச்சிதானந்தர், புதிய கவர்னர்ஜெனரலைவரவேற்றுப் பின்வழிபடச்செய்ததுபற்றிஓர் அன்பருடன் பேசிக் கொண்டிருந்தேன். உடன் அவர் சொன்னார், புதிய கவர்னர் ஜெனரல் குடும்பத்தினர், சுவாமியிடம் யோகாசானப் பயிற்சி பெற்று வருபவர்கள் என்றும், அவர்கள் சுவாமியின் சிஷ்யர்கள் என்றும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் கூறினார்.

இனி கவர்னர் ஜெனரலும் நேருஜியைப் போல் யோகாசனங்கள் செய்வதாயின் நாட்டிலும் இது பரவி, பல மக்களும் பயன் பெறக் கூடும்.

* * *

"இந்திய இசைக் கலைஞர்கள் வருவதைத் தடுக்கவும்" என்று ஒரு சங்கத்தாரும், "அவர்கள் வருவதை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்" என்று மற்றொரு சங்கத்தாரும் கேட்டுள்ளதாக இரு முரண்பட்ட கோரிக்கைகளை படித்தேன்.

இலங்கையில் நாதசுர இசை பூரண வளர்ச்சி அடையவில்லை என்றும், அது வளரும் வரை சில ஆண்டுகளுக்கு, இந்திய கலைஞர்களின் வருகையைத் தடை செய்யக்கூடாது என்றும், கோவில் உற்சவத்துக்கு இவர்கள் வரவழைப்பு நீண்டகால வழக்கமென்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றோர் சாரார், இலங்கை இசையாளரின் நன்மைகளைப் பாதுகாக்க, இத்தடையைப் போடவேண்டுமென்கிறார்கள்.

"தடைபோடு" என்று கேட்கும் முன்பாகவே அதைப் போட்டுவிட அரசாங்கம் காத்திருக்குமென்றும், தடை போட்டுவிட்டால், இங்கு சங்கீத ரஸிகர்களுக்கும் இசை வளர்ச்சிக்கும் பெரு நஷ்டம் ஏற்படுமென்றும் ஓர் அன்பர் கவலைப்படுகிறார்.

பல விஷயங்களையும் கவனித்து அதிகாரிகள் மிக நிதானமாக இதில் எவ்வித முடிவும் செய்ய வேண்டும். இதே சமயம் உள்ளூர்க் கலைஞர்கள் தங்கள் முன்னேற்றத்துக்கு, இவ்வித தடைகளை மட்டும் நம்பியிராமல், தங்கள் கலைகளை வளர்த்துக் கொள்ளக் கூடிய முயற்சி செய்ய வேண்டும். நல்ல கலைஞர்களுக்கு எங்கும் எப்போதும் கிராக்கியுண்டு.

# ஸ்தலஸ்தாபனங்களின் உத்தியோகபூர்வமான தொலைபேசிகள்

## இனி கட்டணங்கள் இல்லை

கொழும்பு, திங்கள்

ஸதலஸ தாபன சபைகள் உத்தியோக பூர்வமாக உபயோகிக்கும் தொலைபேசிகள் மீது விதிக்கப்பட்டு வந்த கட்டணங்களைத் தொடர்ந்து வசூல் செய்வதில்லை எனப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தீர்மானம் செய்துள்ளார்.

ஸதலஸதாபன அமைச்சருடன் கலந்து ஆலோசனை செய்தபின்னர் பிரதமர் இந்த முடிவுக்கு வந்தார்.

தபால் போக்குவரத்து இலாகா சென்றவாரம் விடுத்த சுற்றறிக்கையொன்றில் ஸதலஸதாபன சபைகளுக்கு மேஜ்படி சலுகை 1961 ஜனவரி தொடக்கமாக வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

லைசென்ஸ கட்டணம் வழங்காத காரணத்துக்காக ஸதலஸதாபன சபைத்தொலைபேசித் தொடர்புகள் எதையும் அறுத்துவிட வேண்டாம் எனப் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் சகல போஸமாஸட்டர்களையும் கேட்டுள்ளார்

---

## சுதந்திரமடையவிருக்கும் "எட்டுத்தேசம்" கொண்ட மேற்கு இந்தியா

லண்டன், மார்ச் 5

மேற்கிந்தியசம்மேளனத்திலிருந்து பிரித்தஜமாய்க்காவும் டிரினிடாட்டும் சுதந்திர அரசாங்கங்களாக சாம்ராஜ்யத்துக்குள் இருக்கத்தீர்மானித்திருப்பதுபோல "சிறு எட்டு தேசங்கள்" பாபடோஸின் தலைமையின் கீழ் மேற்கிந்திய சம்மேளனத்தின் நாமத்துடன் தனி சுதந்திர அரசாங்கமாக சாம்ராஜ்யத்திற்குள் இருக்கத் தீர்மானித்திருக்கிறது.

புதிய சம்மேளனத்தின் எட்டு பாகத்தில் வின்வோட், லீவோட் தீவு, பாபடோஸ், ஆகியவையும் அடங்கும் லீவோட்ஸில் அண்டிக்குவா, மொன்ட்ஸெரட் சென்கிடஸ் குழு, சென்ட் கிரஸ்டொபர், நேவிஸ் அங்குல்லா, வின்வோட்ஸ்ஸில் டொமினிக்கா, ஜெமினட், சென்ட் லூஸியா, முதலிய சிறு பகுதிகளுண்டு.

பாபடோஸ் சாம்ரஜ்யத்தினுள் பழைய அரசாங்கமொன்றை நிறுவியுள்ளது. இதுவே புதிய சம்மோளனத்திற்கு தலைநகரமாக இருப்பதோடு மேதாதிபதியின் தங்குமிடமாகவும் இருக்கும்.

இவ்வரசாங்கத்தில், சட்டசபையும் நிறுவப்படவேண்டுமென்றும் சட்டசபையில் ஒவ்வொரு குழுவிலிருந்து ஒரு அங்கத்தவராக எட்டுஅங்கத்தவர் இருக்கவேண்டுமென்றும்பிரேரிக்கப்பட்டது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## ஆலயங்களில் பலியிடுதல்

சமீபத்திய "ஈழநாடு" இதழ்களில் ஆலயங்களில் மிருகபலியைக் கண்டித்து வெளிவந்த செய்திகளைப் படித்து மகிழ்ச்சிகொண்டேன். ஆனால் எனது கிராமத்தில் இந்தகைய கொடிய பழக்கம் இன்னும் நிலவி வருவது வருத்தததுக்குரியது. வருங்காலத்திலாவது மக்களின் மனம் மாறும் என எதிர்பார்க்கிறேன். ஆகவே எனது கிராமத்தில் மட்டுமன்றி பொதுவாக எல்லா இடங்களிலும் உள்ள ஆலயங்களில் பலியிடுதலை நிறுத்துவதற்கு சைவமக்கள் உழைக்கவேண்டும்.

க. தனபாலசிங்கம்.
உரும்பராய்.

---

## உலகில் முக்கிய தானியங்கள் விளைச்சல் 1961–62ல் குறைவு

### காமன்வெல்த் பொருளாதாரக் கமிட்டி மதிப்பீடு

லண்டன், மார்ச். 5

சீனு, ரஷ்யா நீங்கலாக உலகநாடுகளில் 1961–62ல் முக்கியமான தானியங்களின் உற்பத்தி முந்திய சீசனைக் காட்டிலும் குறைவாக இருக்குமெனத் தோன்றுகிறது என்று காமன்வெல்த் பொருளாதாரக் கமிட்டி கூறியது. வட அமெரிக்காவில் வறட்சி ஏற்பட்டதே முக்கிய காரணம் என்று கமிட்டி குறிப்பிட்டது.

தானிய உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்களை தனது சஞ்சிகையில் கமிட்டி வெளியிட்டுள்ளது. 1960-61ல் உற்பத்தியானதைக்காட்டிலும் 1961-62ல் கோதுமை உற்பத்தி சுமார் 1.2 கோடி டன் குறைவாக இருக்கும். அமெரிக்காவிலும் கனடாவிலும் 90 லட்சம் டன்னுக்கு அதிகமாக விளைச்சல் குறைந்துள்ளது.

மேலும் ஐரோப்பாவிலும் விளைச்சல் குறைவு. துருக்கியில் உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆனல் இந்தியாவில் நல்ல விளைச்சல்.

---

## திருவனந்தபுரம் ரயில் விபத்து

### 20 பேர் காயம்

கும்பகோணம், மார்ச் 5

சென்னைவந்துகொண்டிருந்த திருவனந்தபுரம் துரித பாஸஞ்சரின் முதல் இரு பெட்டிகள கும்பகோணம் அருகேயுள்ள சுந்தரபெருமாள் கோவில் ஸ்டேஷன் அருகே தடம்புரண்டன. 20 பேருக்குக் காயமேற்பட்டது. அவர்களில் நான்கு பேருக்கு பலத்த காயம்.

பிரயாணிகள் பெட்டியொன்றும், பார்சல் வானும் தடம்புரண்டன. தடம்புரண்ட பிரயாணிகள் பெட்டி கவிழ்ந்து விழுவதற்கு முன்னதாகச் சிறிதுநேரம் ஒரு மரத்தில் தாங்கிக்கொண்டு சாய்வாக நின்றதால் ஏற்படவிருந்த கோர சம்பவம் தவிர்ந்தது. காயமடைந்தவர்கள் கும்பகோணம் ஆசுப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தோ-சிலோன் எக்ஸபிரஸ் திருவாரூர் வழியாகத் திருப்பிவிடப்பட்டது.

---

## ஜப்பான் ஆட்சேபனை

ஜப்பான், மார்ச். 5

அமெரிக்காவும் பிரிட்டனும் அணு ஆயுதப் பரிசோதனையை நடத்த தீர்மானித்திருப்பது குறித்து ஜப்பான் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

---

## இஸ்ரேல் வளமுறலாமா?

### சிரியா ஆட்சேபம்

ஐ. நா, மார்ச். 5

ஜோர்டான் நதியின் நீரோட்டத்தை திருப்பி விடுவதற்கு இஸ்ரேல் வகுத்துள்ள திட்டங்களை ஆட்சேபித்து, ஐ. நா. கவுன்சிலுக்கு சிரியா புகார் செய்துள்ளது.

இறுதி முடிவு காணும்வரை இப்பணியை இஸ்ரேல் நிறுத்திவைக்கவேண்டுமென 1953 அக்டோபர் 27ந்-திகதிஐ நா.கவுன்சில் ஒரு தீர்மானம் செய்திருப்பதை சிரியா சுட்டிக்காட்டியுள்ளது.

ஜோர்டன் நீரோட்டத்தைப் பயன்படுத்தி, நெடுகப்பாலைவனத்தைச்சோலையாக்குவதில் இஸ்ரேல் வெற்றி கண்டால், அங்கே மேலும் பல இலட்சம் யூதர் குடியேறுவதற்குவாய்ப்பு ஏற்படும். அப்படி அவர்களுடைய எண்ணிக்கை அங்குஅதிகரிப்பது அரபுநாடுகளின் பந்தோபஸ்துக்கு உகந்த தல்லவென்று சிரியா தனது குறிப்பில் வாதிக்கிறது. தவிர, மேல் பகுதியில் ஜோர்டான் நீர் திருப்பி விடப்பட்டால் கீழ்ப் பகுதியில் வசிக்கும் அரபுகளுக்கு பாதகம் விளையலாம் என்றும் அவர் கூறினர்.

---

## வர்த்தகத்துறையில் ஈடுபட வேண்டும்

### உடுப்பிட்டி எம்.பி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றத்தின் பொதுக் கூட்டம் ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில் திரு. நா. கோபாலநாதன் தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின், காப்பாளரான கலைப்புலவர் நவரத்தினத்தின் மறைவுகுறித்து இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் பேசுகையில் ஒவ்வொரு கிராமப்புறத்திலுமுள்ள பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் வர்த்தகக் கல்வியைப் படிப்பிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், மற்றும் ஒவ்வொரு தொகுதிவாரியாகத் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் தொழில்நுட்பக் கல்வி முக்கிய இடம்பெறுகின்றது என்றும் எதிர்காலத்தில் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு தமிழ்மக்களின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய வேண்டுமென்றும், இததுறையில் இறங்கிய மாணவர்கள் வர்த்தகத்துறை நுட்பங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார். ஆசிரியர் கே. சிவஞானமும் பேசினர்.

---

## சுக்காடியா தெரிவு

ஜெய்ப்பூர், மார்ச் 5

ராஜஸ்தான் சட்டசபையின் காங்கிரஸ் குழுவின் தலைவராக திரு. மோகன்லால் சுக்காடியா இன்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றார்.

---

# தம்பதிகள் தற்கொலை

## கஷ்டமனுபவிக்கமுடியாததே காரணம்

ஜாஎலை, திங்கள்

37 வருடகாலமாக சுகசீவியம் நடாத்திவந்த தம்பதிகள் வயோதிபத்தின் கஷ்டங்களை அனுபவிக்கமுடியாது விசனமுற்றதால் ஒன்றுசேர்ந்து தற்கொலை செய்துகொண்டார்கள்

"1925-ம் ஆண்டு விவாகம் செய்துகொண்ட நாம், விவாகம் செய்துகொண்ட காலம்முதல் சந்தோஷமாக வாழ்ந்துவந்தோம். இனிமேலும் நாம் சந்தோஷமாக வாழப்போவதில்லை. எங்களுள் ஒருவர் வயோதிபம் காரணமாகக் குருடாகிப்போனர். எனவே இருவரும் ஒன்றுசேர்ந்து தற்கொலை செய்துகொள்கிறோம்."

ஜா—எல்லையைச் சேர்ந்த திரு. பேர்சி எட்வட் மோறேல் என்பவரும் அவரது மனைவியும் விட்டுச்சென்ற கடிதமொன்றில் இவ்வாறு கூறப்பட்டிருந்தது. ஜா—எல்லைப் பொலிசாருக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

---

# அணுசோதனைத் தடைக்கு மேல்நாடுகள் தற்போதுதயார்?

லண்டன், மார்ச் 5

சென்ற ஆண்டு மேலைநாடுகள் பிரேரித்த உடன்பாட்டில் கண்டுள்ளதைக் காட்டிலும் குறைந்த அளவு தணிக்கையுடன் கூடிய அணு ஆயுத சோதனை தடை உடன்பாட்டை ரஷியாவுக்கு சமர்ப்பிக்க மேற்கத்திய நாடுகள் தற்போது தயாராக உள்ளன.

மார்ச் 14ல் ஆரம்பமாகும் 18 அரசு ஜெனிவா படைப்பலக் குறைப்பு மகாநாட்டில் பிரிட்டனும், அமெரிக்காவும் சமர்ப்பிக்க உத்தேசித்திருக்கும் புது பிரேரணைகள், சர்வதேசத் தணிக்கை ஏற்பாட்டை ரஷ்யா எளிதாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்டவை ரஷியாவிலும், மேலை நாடுகளிலும் ஒரு சில தணிக்கை நிலையங்களுக்கு வகைசெய்யும் உடன்பாடு ஒன்றை மேலைநாடுகள் பரிசீலிக்கத் தயாராயிக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

---

## 100 குண்டுகள் வெடித்தன

அல் ஜியர்ஸ், மார்ச் 5

அல்ஜியர்சில் இன்று காலை சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குள் நூற்றுக்குமதிகமான குண்டுகள் வெடிக்கப்பட்டன, பல கடைகளும் கட்டிடங்களும் சேதமடைந்தன. யாரும் மரணமடைந்ததாக இதுவரை தகவல் இல்லை. ஆனல் பலர் காயமடைந்தனர்.

---

## 'அசெம்பிளிக்கு போகும் விருப்பமில்லை'

### திரு. அண்ணுத்துரை கூறுகிறர்

சென்னை, மார்ச் 5

தாம் அசெம்பிளிக்கு வர விரும்பவில்லை என்று திரு. ஸி. என். அண்ணுத்துரை இன்று ஒரு பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அசெம்பிளிக்கு வருவதுபற்றித் தாம் யோசித்து வருவதாக திரு. காமராஜும், பெரியாரும் கூறிவருவதாகவும் தமக்கு அந்த விருப்பம் இருக்கும் பட்சத்தில் எம். எல். ஏ. ஆக முடியும் என்றும் ஆனல் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அங்கத்தினர்களில் திறமைசாலிகள் இருக்கிறர்கள் என்றும் அவர் சொன்னர்.

---

## மகாராஷ்டிர மந்திரிசபை

பம்பாய் மார்ச் 5

மகாராஷ்டிர சட்டசபையின் காங்கிரஸ் குழுவின் தலைவராக திரு. வை. வி. சாவன் இன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மகாராஷ்டிரத்தின் புதிய மந்திரிசபை இம்மாதம் 8-ம் திகதி புதன்கிழமை பதவியேற்கும் என்று திரு. சாவன் தெரிவித்தார்.

---

## வெளண்டா எச்சரிக்கை

சாலிஸபரி, மார்ச் 5

ரொடிஷியா, நியாஸாலந்து சுதந்திரம் பெற்றுவிட்டதாகத் தென் ரொடிஷியப் பிரதமர் சேர். ரோய் வலன்ஸகி அறிவிப்பாரானல் அவரால் சமாளிக்க முடியாத பெரும் விளைவுகள் ஏற்படுமென்று வட ரொடிஷிய ஆபிரிக்கத்தலைவர் திரு. கென்னத் வெளண்டா அறிவித்தார்.

அச்சமின்றி எல்லோரும் சேர்ந்து வாழக்கூடிய ஒரு தாயகமே எமது விருப்பம் என்று திரு. வெளண்டா கூறினர்.

---

## விமானம் நொருங்கியது

### எவரும்உயிர்தப்பவில்லை

லிஸ்பன், மார்ச் 5

மொஸாம்பிக்கிலிருந்து லிஸ்பனுக்குச் சென்றுகொண்டிருந்த பிரிட்டிஷ் விமானக் கம்பனியைச் சேர்ந்த ஒரு பிரயாணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி நொருங்கி விழுந்தது. இந்த விமானத்தின் சிதைவுத்துண்டுகள் கிடந்ததைப் பார்த்த பிரஞ்சு ராணுவ விமானமொன்று கொடுத்த தகவலின் மீது அப்பகுதிக்கு மீட்புக் கோஷ்டியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விமானத்தில் சென்றவர் எவரும் உயிர் தப்பவில்லை.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்த 111 பேர்களும் மாண்டதாகக் கருதப்படுகிறது.

---

## 'முஸ்லிம் லீக் கலைக்கப்பட மாட்டாது'

பம்பாய், மார்ச் 5

முஸ்லிம் லீக்கை கலைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என யூனியன் உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் கூறியுள்ளதை மகாராஷ்டிர முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி நூர்முகம்மது அகமது மறுத்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜனப் அகமது தெரிவித்ததாவது:–

'முஸ்லிம் லீக்கின் எந்த ஒரு பொறுப்பவாய்ந்த அங்கத்துவருடனவது திரு. பட்டீல் தொடர்புகொண்டிருந்தாரா என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை.'

---

## விஷமருந்தி வாலிபர் தற்கொலை

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த முங்கானப்புலம் வாசியான செவேத்தி சவிரிமுத்து (வயது 32) சென்ற சனிக்கிழமை மாலை விஷமருந்தித் தற்கொலையாளுர்.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற மரணவிசாரணையின் போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## பாடசாலை தேசிய சேவை

கொக்குவில், திங்கள்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞான பண்டித அரசினர் பாடசாலைசென்ற சனிக்கிழமை தலைமையாசிரியர் தலைமையில் தேசீய சேவை நடைபெற்றது. ஐந்து ஆசிரியர்களும் மாணவர்களும் தேசிய சேவையிற் பங்குபற்றினர், பாடசாலை உள்மண்டபம், விளையாட்டிடம், மலசலகூடம் என்பன சுத்தம் செய்யப்பட்டன.

---

## குருஷ்சேவின் விவசாயத் திட்டம்

மாஸ்கோ, மார்ச் 5

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டத்தில் சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் நாலரை மணி நேரத்துக்குமதிகமாக சோவியத் யூனியனின் விவசாயத் திட்டம்பற்றி பேசிக்கொண்டிருந்தார்.

# "உலகம் முழுதும் கல்வியின் மதிப்பு உணரப்படுகிறது"

## சென்னை நிதிமந்திரி சுப்ரமண்யம் பேச்சு

சென்னை, மார்ச் 5

"சமூகத்தில் கல்வியின் பங்கைக் குறித்து பொது மக்களிடையே புதுவிழிப்பு ஏற்பட்டுள்ளது. சமீப ஆண்டுகளில் நேர்ந்த இம் மாறுதலை மகாபுரட்சி என்றே கருதவேண்டும். ஆசிரியர்களின் தியாக சிந்தனையுடன் கூடிய தொண்டுதான் இப்புத்துணர்ச்சிக்குக் காரணமாகும். இதன் விளைவாக கல்வி இலாகாவுக்கும் மந்திரி என்ற வகையில் எனக்கும் நல்ல பெயர் ஏற்பட்டது" என திரு. சுப்ரமணியயம் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர்.

"உலகம் பூராவிலுமே கல்வியின் உண்மையான மதிப்பை உணர்ந்துவருகிருர்கள். வேறெந்த அபிவிருத்தித்திட்டத்துக்கும் செலவிடும் பணத்தைவிட, கல்விக்காகச் செலவிடும் பணம் அதிக மதிட்புவாய்ந்ததென்று உணரப்பட்டுள்ளது.

சென்னை ராஜ்யத்திலும் எந்தெந்தத் துறையில் கல்வி கற்றவர்களும், பயிற்சி பெற்றவர்களும் இருக்கிருர்களோ அங்கெல்லாம் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனல் விவசாயத்துறையில் அவ்வளவு முன்னேற்றம் காணப்படவில்லை. ஏனெனில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோர் கல்வி இல்லாதவர்களாக இருப்பதே யாகும்.

ஆகையால் மூன்ரும் திட்டம் முடிவதற்குள் இலவசக் கட்டாய கல்வித் திட்டத்தைப் பூர்த்தி செய்வது சென்னை அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆதார கல்வியை இப்போதுள்ள முறையிலேயே நீடிப்பதா அல்லது புது கருத்துக்கேற்ப மாற்றியமைக்க வேண்டுமா என்பலதப் பரிசீலிக்க வேண்டும்.

குழந்தைகளுக்குப்பள்ளிக்கூடபூர்வாங்கப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று சென்னை அரசாங்கம் யோசித்து வருகிறது. இத்தகைய பயிற்சி இருந்தால் தான் குழந்தைப் பருவத்திலிருந்தே எல்லோருக்கும் சமவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, பள்ளிக்கூடப்பூர்வாங்கப் பயிற்சி சோஷலிஸ பாணி சமூக அமைப்பின் கடைக்கால் ஆகும்.

சமத்துவ சூழ்நிலையில் குழந்தைகள் வளர்ந்தாலன்றி பின்னைில் பள்ளிக்கூடத்தில் சேரும்போது சமஅந்தஸ்துடன் கல்வியின் பயனை எய்துவதற்கான மனப்பக்குவம் ஏற்படாது பள்ளிக்கூடப்பூர்வாங்கப்பயிற்சி அளவுகடந்த செலவு பிடிக்கும் என்றும் இப்பெரும் செலவை அரசாங்கம் ஏற்க இயலாதென்றும் வாதிக்கிருர்கள். ஆனல் இந்த அஸ்திவாரத்தை எழுப்பாவிட்டால் மற்றெல்லா அபிவிருத்தி திட்டங்களும் கோரிய பலனை தராது.

கல்வித்துறை முன்னேற்றத்தில் நமது ராஜ்யம் சரியான வழியில் போய்க் கொண்டிருக்கிறது. எனது பதவி காலத்தில் நிலைநிறுத்தப்பட்ட நல்ல சம்பிரதாயங்களை எனக்கு அடுத்தபடி பதவி ஏற்பவரும், கல்வி இலாகாவும், ஆசிரியர்களும் கடைப்பிடித்து வருவார்களென்று நம்புகிறேன்" என்றும் அவர் கூறினர்.

# ராஜஸ்தானில் காங்கிரசுக்கு இப்போது மெஜாரிட்டி

## மத்திய பிரதேசத்தில் சுயேச்சைகளின் உதவிக்கு முயற்சி

ஜெய்பூர், மார்ச் 5

ராஜஸ்தானில் காங்கிரஸுக்கு பூரண மெஜாரிட்டி கிடைக்கச் செய்யும் முயற்சி ஆரம்பமாகிவிட்டது. சுயேச்சை அபேட்சகர் ஒருவர் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் அசெம்பிளியில் காங்கிரஸுக்குப் பூரண மெஜாரிட்டி கிடைத்துவிட்டது.

176 மெம்பர்கள்கொண்ட ராஜஸ்தான் அசெம்பிளியில் தனக்கு மெஜாரிட்டி கிடைத்துவிட்டதாக காங்கிரஸ் கட்சி கூறியது. நவாப் அசெம்பிளித் தொகுயில் சுயேச்சையாக வெற்றிபெற்ற அபேட்சகர் ஸ்ரீ ஹனுமான் சிங் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதால், இருஸ்தான மெஜாரிட்டி கிடைத்துள்ளதாம்.

தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸுக்கு 88 ஸ்தானங்களும், எதிர்க் கட்சிகள் அனைத்துக்கும் 88 ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே.

ஸ்ரீ ஹனுமான் சிங் காங்கிரஸில் சேர்ந்துள்ளதை காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இவரைப் பின்பற்றி மேலும் சில சுயேச்சைகள் காங்கிரஸில் சேருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

உத்தியோகபூர்வமான காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ குலாம் முஸ்தபாவை 6937 வோட்டு வித்தியாசத்தில் ஸ்ரீ ஹனுமான சிங் தோற்கடித்திருக்கிருர்.

மத்தியபிரதேச அசெம்பிளியில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைத்ததால், வெற்றிபெற்றுள்ள அநேக சுயேச்சைகளை தாஜா செய்து தன் பக்கம் சேர்த்துக்கொள்ளும் முயற்சியை காங்கிரஸ் மேற்கொள்ளும் என்று நம்பத்தகுந்த காங்கிரஸ வட்டாரங்கள் கூறின.

போபாலில் இவ்வாரம் சட்டசபை காங்கிரஸ் கட்சி கூடும் போது இத்துறையில் உருவான நடவடிக்கை எடுக்கப்படும். எனினும், சில பூர்வாங்க முயற்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டனவாம்.

சுயேச்சைகளில் போட்டி காங்கிரஸ்காரர்களும் உள்ளனர்.

தேர்தலில் தோல்வியுற்ற டாக்டர் கட்ஜுவுக்குப் பதில் மற்றொரு தலைவரை பொறுக்கும் முயற்சியால் ஸ்ரீ தேபர் ஈடுபட்டிருக்கிருர்.

மத்திய பிரதேச அசெம்பிளியில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி கிடைக்கவில்லை. 288 மெம்பர்கள்கொண்ட அசெம்பிளியில் காங்கிரஸுக்கு 142 ஸ்தானங்களும், எதிர்க்கட்சிகளுக்கு 146 ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன.

1957 தேர்தலில் காங்கிரஸுக்கு 231 ஸ்தானங்கள் இருந்தன. சுதந்திரம் கிடைத்த பிறகு இதுவரையில் ம. பி. அசெம்பிளியில் காங்கிரஸுக்கு அசைக்கமுடியாத மெஜாரிட்டி இருந்துவந்தது. எல்லா எதிர்க்கட்சிகளுக்குமாகச் சேர்ந்துபோன அசெம்பிளியில் 57 ஸ்தானங்களே இருந்தன.

பிரதம மந்திரி நேருவின் விசேஷ தாக்குதலுக்குட்படுத்தப்பட்ட ஜனசங்கம்தான் இந்தத் தேர்தலில் முக்கிய எதிர்க்கட்சியாக வந்திருக்கிறது. அவர்களுக்கு 41 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. கட்சி பலம் பின்வருமாறு:—

காங்கிரஸ் 142, ஜனசங்கம் 41, பி. சோ. 33, சோஷலிஸ்ட் 14, ராமராஜ்ய பரிஷத் 10, ஹிந்துமகாசபை 6, சுதந்திராக் கட்சி 2, கம்யூனிஸ்ட் 1, சுயேச்சைகள் 39.

# பத்திரிகைகளுக்கு நேருஜி யோசனை

## "ஆக்க வேலைகளுக்கு இனி முக்கியமளிக்க வேண்டும்"

புதுடில்லி, மார்ச் 5

"அரசாங்க வற்புறுத்தல்கள் இன்றி பத்திரிகைகள் சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியதுதான். அதேசமயம் வேறுவித வற்புறுத்தல்களுக்கும் பத்திரிகைகள் உட்படக் கூடாது."

இவ்வாறு பிரதமர் நேருஜி, புதுடில்லியில் ஒரு பத்திரிகையின் தங்கவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும்பேசியதாவது:- பத்திரிகைகள் தங்கள் கருத்துக்களைத் தீவிரமாக தெரிவப்பதுடன் மற்ற கருத்துக்களையும் வெளியிடவேண்டும். அப்போது தான் மக்கள் எல்லா கருத்துக்களையும் அறியமுடியும்.

விபத்துக்களுக்குக்கொட்டை எழுத்துக் கொடுத்து வெளியிடுவது மாறி, பத்திரிகைகள் ஆக்கவேலைகளுக்கு முக்கியம் அளிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. பொருளாதாரம், பஞ்சாயத் ராஜ்யம், திட்டம் போன்ற விஷயங்களுக்கு முதலிடம் தரவேண்டும்.

இந்தியா சிலகாலமாக முன்னேறிவருகிறது. மூன்றரை வாரமாக தேர்தல் விஷயமாக பிரயாணம் செய்ததில், காஷ்மீர் முதல் கேரளம்வரை இந்தியாவின் முகம் மாறிவருகிறது. மக்கள் முன்னைவிட உணவு, உடை, குடியிருப்பு வசதி இவற்றில் முன்னேறியுள்ளனர். ஏழ்மையையும் அதிகமாகக் கண்டேன். இது எனக்கு வருத்தமளித்தது. இந்தியாவில் எல்லாருக்கும் சுபிட்சம் கிடைக்கும் முறையில் இந்தியா முன்னேறிவருவது உறுதி."

# பருவ நிலைகளை மாற்ற முடியும்

## ரஷ்யாவின் திட்டங்கள்

மாஸ்கோ, மார்ச். 4

கணிசமான அளவுடைய பிரதேசங்களில் மனிதன், பருவ நிலைகளை மாற்றியமைக்கமுடியும். இது வெறும் அனுமானம் அல்ல; விஞ்ஞானபூர்வமாக சாதிக்கக்கூடியதோர் காரியமாகும். இவ்வாறு சோவியத் யூனியனின் பிரதான பூ பௌதீக ஆய்வுக்கூடத்தின் தலைவர் மிகைல்புதிகோஎழுதியுள்ளார்.

சில இரசாயனக் கலவைகள் மேகங்களைப் பாதிக்கின்றன என்பது தெரிந்ததே. இவ்வாறு வேண்டிய இடங்களில் மழை பெய்யும்படி செய்வதும் ஆலங்கட்டி மழை பெய்யாமல் தடுப்பதும் சாத்தியமாகும். சென்ற ஆண்டு 30 ஹெக்டர் பிரதேசம் ஒன்றில் ஆலங்கட்டிமழை பெய்யாமல் தடுக்கப்சட்டது.

பூபௌதிக ஆராய்ச்சிநிலையத்தில் ஒரு "மூடுபனி அறை" அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மேகங்களுக்குள் நடைபெறும் கிரிகைகளை நேருக்கு நேராகக் காண்பதற்கு வசதி உள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு மேகங்களை இயக்கிவைக்கமுடியும் என்பது பற்றிய ஆராய்ச்சிகளை சோவியத் விஞ்ஞானிகள் நடத்திவருகின்றனர்.

காற்றுத்துகள்களின் கூட்டத்தினுடைய திசையை மாற்றுவதற்கான முறைகளையும் மேற்படி ஆராய்ச்சிநிலையம் ஆராய்ந்துவருகிறது.

# களனி விகாரைப் பகுதி புனித நிலமாக்கப்படும்

கொழும்பு, திங்கள்

களனியிலுள்ள ராஜ மகா விகாரையைச் சுற்றியுள்ள நிலப்பகுதியைப் புனித நிலமாகப் பிரகடனஞ் செய்வதற்கான முயற்சிகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும்.

விகாரையைச் சுற்றியுள்ள நிலப்பரபபை வாங்குவதற்கும் தெரு வீதியமைப்பதற்கும் சுமார் 4,34,000 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முயற்சியின் இந்த முதலாவது கட்டம் மேற்கொள்ளப்பட்டதும் காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் கனவு நனவாக ஆரம்பித்துவிடும் என விகாரைக் காப்பாளர் செனட்டர் எஸ். டி. எஸ். சோமரத்ன கூறியுள்ளார்.

திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகளுக்கு சுமார் 7,58,157 ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வீதி விஸ்தரிப்பு வேலைகள், பொதுமக்களுக்கான வசதிகளை அமைத்தல் ஆகியன இரண்டாங் கட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

மூன்ரும் கட்டத்திலும் சுமார் 4,84,125 ரூபாய்வரை செலவாகும் என நம்பப்படுகிறது. வீதி விஸ்தரிப்பு, குழாய் நீர் வசதிகளமைத்தல், மின்சார வசதிகளமைத்தல் ஆகியவை மூன்ரும் கட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

# ஆசிரியர்கள் வேறு உத்தியோகங்களுக்கு மனு

கொழும்பு, திங்கள்

கல்வி இலாகாவைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் வேறு உத்தியோகம் கோரி மற்றைய இலாகாக்களுக்கு விண்ணப்பம் அனுப்பி வருகிருர்கள். கல்வி இலாகாத் தலைமைக் காரியாலயத்துக்கு பெருந்தொகையான ஆசிரியர்கள் தினமும் கடிதங்கள் அனுப்பி வருவதாகத் தெரிகிறது. தலைமைக் காரியாலயத்துக்கு வேலைகள் அதிகமாகியிருப்பதால் வேலை மாற்றம்பற்றி ஆசிரியர்களை மாவட்ட உதவி வித்தியாதிபதிகளுடன் தொடர்பு கொள்ளும்படி வித்தியாதிபதி கேட்டுள்ளார். இந்த நியதியை ஒருவரும் மீருதிருக்கும்படி வித்தியாதிபதி கோரியுள்ளார்.

# துறைமுகத்தில் பழுதடைந்து வரும் உணவுப்பொருட்கள்

## சுகாதார அதிகாரிகள் சங்கடம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு துறைமுகத்திலுள்ள ஸ்டோர் அறைகளில் உணவுப் பொருள்கள் கிடந்து பழுதடைந்து வருவதாகத் தெரியவருகிறது. பாதுகாப்பு எதுவுமின்றி உணவுப் பொருள்களில் அழுக்குப் படிவதாயும் அவை அழுகிப்போகின்றன எனவும் தெரியவந்துள்ளது. துறைமுக ஸ்டோர்களில் இருக்கும்வரை துறைமுகக் கார்ப்பரேஷனே பொருள்களுக்குப் பொறுப்பு ஆகையால் சுகாதார அதிகாரிகள் உணவுப் பொருள்கள் அழுகிப் போவதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாதிருக்கிறது.

துறைமுகப்பகுதியிலுள்ள சுகாதார அலுவல்களை மேற்கொள்வதற்குத் தனிப்பட்ட அதிகாரசபை நியமிக்க வேண்டிய அவசியத்தை இங்கு சுகாதார டைரக்டர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணரத்தின சுட்டிக் காட்டியுள்ளார். தற்போதைய நிலைமையின் கீழ் பழுதாகிய உணவுப் பொருள்களைத் தவிர்ப்பதற்கும் சுகாதார இலாகாவுக்கு அதிகாரமில்லை. துறைமுகக் கார்ப்பரேஷனே இந்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றது. துறைமுகப் பகுதியைச் சுத்திகரிக்கும் வேலைகளையும் கார்ப்பரேஷனே செய்து வருகிறது.

துறைமுகத்திலுள்ள சுகாதார வேலைகள் அனைத்தையும் மேற்கொள்ளுவதற்குத் தனிப்பட்ட சபை ஒன்றை நிறுவுவதற்குச் சுமார் 78,000 ரூபாய் செலவாகும் என டாக்டர் கருணரத்தின மதிப்பிட்டுள்ளார். துறைமுகத்தில் நல்ல சுகாதார சேவை அவசியமாகையால் இந்தச் செலவு நியாயமானது எனவும் அவர் கூறியுள்ளார்.

துறைமுகச் சுகாதார அலுவல்கள் தனிப்பட்ட ஒரு அதிகாரத்தின் கீழ் விடப்பட வேண்டும் என டைரக்டர் ஜெனரல் சில தினங்களுக்கு முன்னர் ஆலோசனை கூறியது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

# க்ஷயரோகத்துக்கு பிரிட்டிஷ் உதவி

கொழும்பு, திங்கள்

கொழும்பில் சாம்ராஜ்ய பரிசுக் குழுவின், க்ஷயரோகத்தைக் கட்டுப்படுத்தி தடை செய்யும் சேவைபற்றி டாக்டர் ஜே. எச். எப். ஜெயசூரியாவுக்கு விளக்கிக் கூறும்போது பிரிட்டிஷ் ஹைகமிஷனரான சேர் அலக்ஸான்டர் மோரிலீ பிரிட்டனில் தன்னலமற்ற சங்கமான மார்பு இருதயக்குழு, சாம்ராஜ்யம் முழுவதும் இத்தகைய நோய்களுக்குப் பெரும் சேவையைப் புரிந்துவருகிறது என்று கூறினர்.

"இதே விதமான பல தொடர்புகள் சாம்ராஜ்ய நாடுகளை எல்லா வாழ்க்கையிலும் இணைக்கின்றது. மற்றும் அரசாங்கங்களுக்கிடையிலுள்ள தொடர்பு சாம்ராஜ்யத்தை ஒற்றுமைக் குடும்பமாக இருக்கச் செய்கிறது. க்ஷயரோகத்திற்கு எதிரான நடவடிக்கையும் இதே தரத்தைச் சேர்ந்த பகுதியில் மிகத் துரிதமாக முன்னேறிக்கொண்டு வரும் இயக்கமும் இலங்கைத் தேசிய குழு க்ஷயரோகத் தடை நடவடிக்கையில் சிநேகிதபான்மையுடன், அரசாங்கத்துடனும் மற்றவர்களுடனும் ஒத்துழைக்கும் என்று அவர் கூறினர்.

சேர் அலெக்ஸான்டர், இலங்கையில் க்ஷயரோகத்திற்கு எதிரான நடவடிக்கைக் குழுவிற்கு பிரிட்டிஷ் அரசாங்கமும், பிரிட்டிஷ் தனிப்பட்ட பிரஜைகளும் அளித்த உதவிகளையும் பற்றிக் கூறினர்.

—

யாழ்ப்பாணம், திங்கள்

ஆத்திப்புலம் கலைமகள் சனசமூக நிலையத்தில் 3-3-62-ல் செல்வன் கு. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற மாதாந்தப் பொதுக் கூட்டத்தில், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மகளை அணைத்துக்கொண்டு 'இதுவே இறுதி முத்தம்' என்றாராம்

## தற்கொலைக்கு முன் நடைபெற்ற சம்பவம்

பருத்தித்துறை, திங்கள்

துன்னாலை வடக்கைச் சேர்ந்தகந்தன் சின்னராசா (வயது 27) என்பவர் பொலிடோல் என்னும் கிருமிநாசினியைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

சோடாவுடன் கலந்த பொலிடோலைக் குடிக்குமுன் மகளான சந்திராவை அணைத்து இதுவே உனக்கு நான் தரும் இறுதி முத்தம் எனக் கூறிக் குடித்தாராம்.

குடும்பத்துள் ஏற்பட்ட மனஸ்தாபமே இவரது இம் முயற்சிக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. கே. தம்பிப்பிள்ளை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## தண்ணீரற்ற ஆஸ்பத்திரி

குருநாகலை, திங்கள்

குருநாகலை ஆஸ்பத்திரியில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்ததனல் நோயாளர் அசுத்தமான தண்ணீரையே பாவிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து குருநாகலை எம். பி. திரு. ஜே. பத்திரான குருநாகலை மாநர சபைக்கு புகார் செய்துள்ளார். தற்பொழுது இங்கு இருக்கும் தண்ணீர் நகரின் தேவைக்குப் பற்ருதிருப்பதாக நகரசபை அறிவித்துள்ளது.

## பஞ்சாப் முதன் மந்திரி தொகுதி

அமிர்தசரஸ், மார்ச் 5

மாஸ்டர் தாராசிங்கின் இல்லத்தில் பஞ்சாப்பிய எதிர்க்கட்சிகளின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. 34 ஓட் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற முதன் மந்திரி கய்ரோனின் தொகுதியில் மீண்டும் தேர்தல் நடைபெறவேண்டுமென கூட்டத்தில் கோரப்பட்டது.

## ஸ்கந்தவரோதயா கல்லூரி வெற்றி

தெல்லிப்பளை, ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தவரோதயா கல்லூரி 2விக்கட் 5ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மகாஜனக் கல்லூரி முதல் இன்னிங்சில் 78 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்சில் 88 ஓட்டங்களும், எடுத்தது. ஸ்கந்தவரோதயா முதல் இன்னிங்சில் 60 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 111 ஓட்டங்களும் எடுத்தது.

தெல்லிப்பழை ரோயல் கிரிக்கட் கழகத்திற்கும் மல்லாகம் கிரிக்கட் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் ரோயல் கோஷ்டி 8 விக்கட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## 'டிஸ்கவரர்'

கேப்கனவரோல், மார்ச் 5

"டிஸ்கவரர்" என்ற அமெரிக்க வானவெளிப் பேழை ஒன்று 4 நாட்கள் பூமியைச் சுற்றிய பின் மீட்கப்பட்டது.

# 1½ மணி முன்னறிவித்தலில் வேலை இடமாற்றம்!

## துறைமுகக் கமிஷன் ஊழியருக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு துறைமுகக் கமிஷனில் கடமையாற்றி வந்த லிகிதர் ஒருவர் ஒன்றரை மணிநேர அறிவித்தலுடன் வேலை இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். துறைமுகக் கமிஷனில் நேரம் கணிக்கும் லிகிதராக கடமையாற்றி வந்த இவர் துறைமுகக் கமிஷனில் உள்ள வேறு ஒரு இலாகாவுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டார்.

டபிள்யு. ஆர். பீரிஸ் என்னும் இந்த சேவையாளர் மார்ச் முதலாம் திகதி காலை 6-30க்கு வேலைக்குச் சென்றபோது அவரது தலைமை அதிகாரி வேலை மாற்ற அறிவித்தலை வழங்கினர் காலை 8 மணி தொடக்கமாக வேறு இலாகாவில் பிரஸ்தாப லிகிதர் வேலை பார்க்கவேண்டும் என அறிவித்தலில் கேட்கப்பட்டிருந்தது.

டபிள்யு. ஆர். பீரிஸ் 32 ஆண்டுகயாக அரசாங்க சேவையில் இருந்து வந்தவர். கைத்தொழில் இலாகாவில் கடமையாற்றிய இவர் ஆறுவருடங்களுக்கு முன்னரே துறைமுகக் கமிஷனில் கடமையேற்றார்.

# கருவாடு தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

## இரு மத்திய கிழக்கு நாடுகள் உதவி

கொழும்பு, திங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள கருவாட்டுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு இரு மத்திய கிழக்கு நாடுகள் உதவ இருக்கின்றன. ஏடன், மஸ்கட் ஆகிய இரு நாடுகள் பெருந் தொகையில் கருவாடு இறக்குமதி செய்ய முன்வந்துள்ளன.

கருவாட்டு இறக்குமதி பற்றி உணவு இலாகா இந்த நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளது. இன்னும் சில வாரங்களில் சுமார் 5000 மூடை கருவாட்டை இந்த நாடுகள் இங்கு அனுப்பி வைக்கும். இது வந்து இறங்கியதும் விநியோகத்துக்கு வேண்டிய அளவு கருவாடு இங்கு இருக்கும் என உணவு இலாகா கருதுகிறது.

கருவாடு வழங்கக் கூடிய ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுடனும் உணவு இலாகா தொடர்பு கொண்டு வருவதாகத் தெரிகிறது. இலங்கை-ஈரான் வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் ஏற்கெனவே ஈரான் இலங்கைக்குக் கருவாடு ஏற்றுமதி செய்து வருகிறது. இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக ஒப்பந்தம் அண்மையில் தெஹிரானில் கைச்சாத்திடப்பட்டது.

## அரபிப் பாடசாலைக்கு அத்திவாரம்

சாவகச்சேரி, மார்ச் 5

"அஞ்ஞான இருளில் அகப்பட்டு அல்லல் உறும் முஸ்லிம் மக்களுக்குப் பள்ளி வாசல்களும் அரபிப் பாடசாலைகளும் ஞான ஒளியை வீசும் நிலையங்களாகும். இந்த அரபிப்பாடசாலை சாவகச்சேரி மக்களுக்கு மாத்திர மன்றி இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் எல்லோருக்கும் பயன்படக்கூடிய அரபிக் கல்லூரியாய் விளங்கவேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி முஸ்லிம் சமூகசேவா சங்கத்தாரின் முயற்சியால் சாவகச்சேரிப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணியில் நிறுவப்பட இருக்கும் அரபிப்பாடசாலைக்கு அத்திவாரக்கல்நாட்டும்போது யாழ்ப்பாணம் ஹாஜி எல். கே. காழி அலாவுதீன் உரைநிகழ்த்தினர். யாழ்ப்பாணம் ஹாஜி சுலைமான் அப்துல் கரீம் சேட்டும் அத்திவாரக்கல்நாட்டினர்.

## காசியில் சிவராத்திரி

காசி, மார்ச் 5

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்று காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கு 3 லட்சம் மக்கள் சென்றனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

(செய்திகள்: காலை 7-00. பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

### கொழும்பு

செவ்வாய் 6-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-15 திரைஇசை, 6-15 பாங்கு, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15, இசைச்சித்திரம், 9-45 எஸ். நடராசா – நாகஸ்வரம்

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. எம். கமலா - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு. 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4.45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 "ஜாதி வேற்றுமை ஒழிப்பு" - பேச்சு, 7-45 மதுரை மாரியப்பசாமி - பாட்டு, 9-15 'வாழ்வின்சுடர்,' - சிறுகதை 9-30 மெல்லிசை, 9-50 குரல் - சஞ்சிகை நிகழ்ச்சி.

## ஆபிரிக்காவில் திருச்சபைசேவை

மொறட்டுவை, திங்கள்

ராஜகிரியாவைச் சேர்ந்த டாக்டர் ரொனல்ட் கோமஸ் மேற்கு ஆபிரிக்காவில் மெதடிஸ்ட திருச்சபையில் சேவை செய்ய இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தனவின் சகோதரர் டாக்டர் ராய் குணவர்த்தன நைஜீரியாவிலும், அவரது சகோதரி அமெலியா டி ஒஸ்கென் யாவிலும், மெதடிஸ்ட் திருச்சபையில் இருக்கிறார்கள்.


# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனல்

தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரொஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரு. 1-20 | ரு. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

**அப்பியாச புத்தக ரகங்கள்:**

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரொஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சத வீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

**ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்**

போன்: 94040.

6, அல்பேட் க்ரெசன்ட், கொழும்பு 7.

## 'ஜனநாயக ஆட்சியில் நல்லதொரு எதிர்க்கட்சி தேவை'

—திரு. பாட்டீல்

பம்பாய், மார்ச். 5

திறமையுள்ள பல எதிர்க் கட்சி அங்கத்தவர்கள் லோக சபைத் தேர்தலில் வெற்றி பெருததுகுறித்து தாம் வருந் துவதாக மத்திய உணவு மந் திரி திரு. எஸ். கே. பாட்டீல் இங்கு தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மகாநாட் டில் பேசும்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பாட்டீல் மேலும் கூறி யதாவது:

ஜனநாயக ஆட்சியில் நல்ல தொரு எதிர்க்கட்சி இருப்பது எப்பொழுதும் நன்மை அளிப் பதாக இருக்கும். திரு. அசோக் மேத்தா போன்ற எதிர்க்கட் சித் தலைவர்கள் வெற்றிபெறு மாறு காங்கிரஸ்காரர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

## மனைவிகளைக் கொலை செய்தாக கூறப்படும் இரு நபர்கள் எங்கே?

### போலிஸார் தேடுகின்றனர்

கோவை, மார்ச் 5

இரு நபர்கள் கோவைக்கு அருகேயுள்ள கிராமங்களில் தங்களது மனைவிகளைக் கொலை செய்ததாகச் சொல்லப்படு கிறது. இவ்விரு நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்ற னர். இரு கொலைகளைக் குறித் தும் தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பேரூர் அருகேயுள்ள கிரா மத்தில் 30 வயதுள்ள மாகாளி என்ற நபர் தனது மனைவி துளசியை (22 வயது) கத்தி யால் குத்திக் கொலை செய்த தாகக் கூறப்படுகிறது. பின் னர் கணவனும் உயிரை மாய்த்துக்கொண்டதாகச் சொல் லப்படுகிறது.

பில்லூர் அணைக்கட்டுத் திட்ட தொழிலாளியான கணே சன், தனது 20 வயதுள்ள மனைவி லக்ஷ்மியைக் கொலை செய்ததாகச் சொல்லப்படு கிறது. அடிஷனல் போலிஸ் சூப்பிரண்டெண்ட் ஸ்ரீ கே. சீதா ராமன் புலன் விசாரித்துவரு கிறார்.

## லொறி விபத்தில் 31 பேர் பலி

லட்டாகியா, சிரியா, மார்ச் 5

பெட்ரோல் லொறி ஒன்றும் மற்றொரு லொறியும் லட்டா கியா அருகே மோதிக்கொண் டதன் விளைவாக 31 பேர் கொல்லப்பட்டனர். குறைந்த பட்சம் மற்றும் 39 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

உயிரிழந்தவர்களில் பெரும் பாலோர் பக்கத்துக் கிராமத் தைச் சேர்ந்த விவசாயிகள்.

விபத்து ஏற்பட்ட பின், லொறியிலிருந்து கீழே வடிந்து கொண்டிருந்த பெட்ரோலைப் பிடித்து வைப்பதற்காக வாளி களுடன் விவசாயிகள் விபத்து ஸ்தலத்துக்கு விரைந்தனர்.

பெட்ரோல் திடீரென தீப் பிடித்துக்கொண்டதால் சுமார் 70 கிராமத்தினர் தீயில் சிக் கிக்கொண்டனர். அவர்களில் 20 பேர் ஸ்தலத்திலேயே வெந்துமாண்டனர். மற்றும் 11 பேர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன் இறந்து விட்டனர்.

# இரவு நேரங்களில் பெண் பிள்ளைகளை சந்திக்காதீர்கள்

## வாலிபருக்கு மாஜிஸ்திரேட் புத்திமதி

காங்கேசன்துறை, திங்கள்

'உமக்கு அழைப்பு வந்தாலன்றி இரவு நேரங்களில் பெண்பிள்ளைகளிருக்கும் வீடுக ளுக்குச்சென்று அவர்களைச் சந் திக்காதீர்"

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டபிள்யு. டி. தாமோதரம் வாலிபர் ஒருவருக்குக் கூறிய புத்திமதி இதுதான்.

வசாவிளானைச் சேர்ந்த ஆர். சுப்பிரமணியமென்ற வாலிபர் 3வயதுக் குழந்தை ஒன்றின் தங்கச் சங்கிலி ஒன்றைத் திரு டியதாகக் குற்றஞ்சாட்டப்பட் டுத் தொடரப்பட்ட வழக்கில் விசாரணையின்போது தீர்ப்ப ளிக்கையிலேயே மாஜிஸ்டிரேட் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அம்பலவாணர் தம்பையா என்பவர் சாட்சியமளிக்கை யில் தெரிவித்ததாவது:

சென்றவருடம் அக்டோபர் 10ந் திகதியன்று நள்ளிரவில் 'திருடன் திருடன்'என்ற குரல் கேட்டு நான் எழுந்தபோது சுப்பிரமணியம் என்பவர்எனது மணமாகாத இரு பெண்களும் நித்திரை செய்துகொண்டிருந்த அறையினுள்ளிருந்து வெளியே ஓடினார்.

நான் அவரைத் துரத்திப் பிடித்தேன்.

சுப்பிரமணியம் சார்பில் ஆஜ ரான திரு. ஆர். ஜே. செல்வ ரத்தினம் கூறியதாவது:-

சுப்பிரமணியம், சாட்சிக் காரர் தம்பையாவின் ஒரு மக ளுடன் சிநேகம் கொண்டிருந் தார். தம்பையாவின் மகளைச் சந்திக்கவே குறிப்பிட்ட தினத் தன்று சுப்பிரமணியம் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தார். எதிரி தங்கச் சங்கிலியைத் திருடிவிட்டதாகக் கூறப்படு வது பொய்என்றே கூறுவேன்.

மாஜிஸ்திரேட் வழக்கைத் தள்ளுபடி சய்து தீர்ப்புக் கூறு கையில் தம்மையா ஒரு சம்ப வம்பற்றி மூன்று விதமாகக் கூறியிருக்கிறார் என்றும் எதிரி அவர் வீட்டுக்குச் சென்றிருக் கிறார் என்பது உண்மை எனத் தாம் நம்புவதாகவும் அவர் இளம் பெண்ணின் அழைப்பை ஏற்றே அங்கு சென்றுரேயன் றித் திருடுவதற்காகச் செல்ல வல்லையென்றும் தெரிவித்தார்.

## சிவராத்திரி விழா

### கால்நடையாகச் சென்ற பக்தர் கோஷ்டி

காங்கேசன்துறை, திங்கள்

சிவராத்திரியை அனுஷ்டிக் கும் பெண்களும் ஆண்களும் சேர்ந்த ஓர் கோஷ்டி கால் நடையாக நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து நேற்று ஆறு மணிவரையில் வழிபாட்டுடன் புறப்பட்டு இன்று அதிகாலை யில் கீரிமலை வந்து சேர்ந்தனர். இக்கோஷ்டியில் சுமார் நாற் பது பக்தர்கள் பங்குபற்றினர். என்று தெரிகிறது. நல்லூரிலி ருந்து கீரிமலைவரையும் கற்பூ ரச் சட்டியும் பிரார்த்தனையும் சிவநாம வழிபாட்டுடனேயே சிவராத்திரி விழாவைக்கொண் டாடினர்.

## விவாகரத்துகளும் விபத்துகளும்

ஐ. நா. மார்ச் 5

மோட்டார் விபத்துக்களைப் பற்றி உலக ஆரோக்கிய ஸ்தா பனம் ஒரு ரசமான அறிக் கையை வெளியிட்டிருக்கிறது: விவாகரத்துச்செய்யப்பட் டுள்ள ஆடவர்களே அதிக மாக விபத்துக்களில் இறப்ப தாகவும், சந்தோஷமாகக் குடு ம்ப வாழ்க்கை நடத்தும் ஒரு ஆடவருக்கு 3 பேர் வீதம் விவாகரத்துச்செய்யப்பட் டுள்ள ஆடவர்கள் இறப்பதா வும் மேற்கூறிய அறிக்கை கூறு கிறது.

விவாகரத்துச்செய்யப்பட் டுள்ள பெண்களே மற்றப் பெண்களைப் பார்க்கிலும் மோட்டார் விபத்துக்களில் அதிகமாக இறக்கிறார்களாம். செவிடர்கள், திறமை வாய்ந்த டிரைவர்களாக இருப்பதாக வும், ஆனால் அவர்களுடைய பார்வை நன்கு சோதிக்கப் படவேண்டும் என்றும் அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

## சீதனக் கவலையால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டனர். இறந்தவர் சமைய லறையில் சமைத்துக்கொண்டி ருந்தார். நான் தலைவாசலில் இருந்தேன். மாலை 3 மணிய ளவில் எனக்கு பசிஏற்பட்ட தால் சமையலறைக்குள் சென் றேன் உள்ளே சென்றதும் பாக்கியம் குற்றுயிராக கழுத் தில் சுருக்கிட்டுத் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். நான் உடனே குழறினேன். உடனே கணபதிப்பிள்ளை, நட ராசா, ஆயுள்வேத டாக்டர் வைத்திலிங்கம் ஆகியோர் வந் தனர். கயிற்றைக் கத்தரித்து ஆளை இறக்கினர்கள். செயற் கைச் சுவாசமும் கொடுக்கப் பட்டது. ஆனால் சிறிது நேரத் தில் அவர் இறந்துவிட்டார்.

டாக்டர்வைத்திலிங்கம், கண பதிப்பிள்ளை, நடராசா, ஆகி யோரும் சாட்சியமளித்தனர்.

தற்கொலையெனத் தீர்ப்பளி க்கப் பட்டது.

## 'தனி நபர் வழிபாடு' கொள்கையை கைவிடுக

### கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு ரஷ்யா அறிவுறுத்தல்

லண்டன், மார்ச். 5

தனிநபரை வழிபடும்சித்தாந் தத்தைக் கைவிடுமாறு மாஸ் கோ ரேடியோ சீன மக் களுக்கு ஒலிபரப்பிய செய்தி யில் அறிவுறுத்தியது.

சமீபத்தில் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி யின் 22வது காங்ரசில் 'ஸ்டா லின்வழிபாட்டை'ரஷ்ஷியர்கள் கண்டனம் செய்தபோது' போ லந்துப் பிரதிநிதிகளும், ஹாலந் துப் பிரதிநிதிகளும் ரஷ்ய நிலையை ஆதரித்ததாகவும்,அல் பேனியர்கள் மாத்திரமே எதி ர்த்ததாகவும் ஒலிபரப்பில் கூறப்பட்டது. தனிநபர்வழி பாட்டுச் சித்தாந்தத்தையும், அதன் எஞ்சியுள்ள சம்பிரதா யங்களையும் கைவிடவேண்டும் என்றும் இந்தப் போராட்டம் ரஷ்யாவின் உள்நாட்டுவிஷய மென்று எண்ணுவது தவறு என்றும், இந்தச் சித்தாந்தத் தைக் கைவிடுவது உலகமுழு வதிலுமுள்ள கம்யூனிஸ்டுக ளின் கடமையாகும் என்றும் ஒலிபரப்பில் உணர்த்தப்பட் டது.

## யாழ்ப்பாணத்தில் ஆமைக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செய்வாய்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆமைவிற்பனையாளர்கள் ஆமை களை ஏற்றுமதிசெய்ய ஆலோசனைசெய்து வருவதால் இங்கு ஆமைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆமை உண்ப வர்கள் இதனல் அதிக பணம் கொடுத்து ஆமை இறைச்சியை வாங்கவேண்டியுள்ளது.

150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஆமை 300 ரூபா வுக்கும் விற்பனை செய்யப் பட்டு வருவதாகத் தெரிகின் றது.

## போர்ச். காலனிகளில் நிரந்தர தொண்டர்படை

லிஸ்பன், மார்ச் 5

போர்ச்சுகலின் காலனிகள் ஒவ்வொன்றிலும், ராணுவத் துக்கு உதவும் பொருட்டு நிரந் தர தொண்டர் படை அமை க்கப்படவிருக்கிறது. இவ்வி வரம் இன்று இங்கு வெளி யான உத்திரவு ஒன்றிலிருந்து தெரிகிறது.

## விசித்திர பார்ஸல்!

கஸிபாத், மார்ச். 5

கூட்ஸ் வாகனுள் வைத்து மூடப்பட்ட ஒரு போர்ட்டர் ஒரு வாரம் கழித்துப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார். இந்த நிகழ்ச்சி பம்பாய்க்கும் காஸிபாத்துக்கும் இடையே நிகழ்ந்துள்ளது.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கியானோபா (31) பெப்ரவரி22ந் தேதி ஒரு கூட்ஸ் வாகனில் கோதுமை மூட்டைகளை ஏற் றிக் கொண்டிருந்தார். அப் போது அவருக்கு மயக்கம் வந்து அதனுளளே விழுந்து விட்டாராம். அதை யாரும் கவ னியாமல் வாகனைச்சீல்வைத்து மூடி, காஸிபாத் செல்லும் ரயி லுடன் இணைத்துவிட்டனர்.

நேற்று அதிகாலை காஸிபாத் ஸ்டேசனில் அந்த ரயில்இருந்த போது, அந்த வாகன் கதவை இடிக்கும் சப்தத்தை ரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர் ந்த ஒருவர் கேட்டார். உடனே வாகனைத் திறந்து பார்த்த போது அந்தபோர்ட்டர் அரை மயக்கத்துடனும், சோர்ந்தநிலை யிலும் காணப்பட்டார். ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட் டார்.

தனது கஷ்டகால பிரயாண த்தை அவர் தெரிவிக்கையில், ஒருவார காலமும்தான் கோது மையிலேயே உண்டு வாழ்ந்த தாகக் கூறினர். தாகத்துடன் உயிர் இழக்கக் கூடிய நிலையில் தான் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.


2-வது வாரம்!

பிளாஸா (வெள்ளவத்தை) கேபிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) சகாரா (சிலாபம்) மொடர்ன் (பதுளை)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசன நடித்த




8-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, நடித்த

பாசமலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த

மகேஸ்வரி




லண்டன் பல்கலைக் கழகத்தில் மின்சார எஞ்சினியராகப் பட்டம் பெற்ற பின்னர் இந்தியரான திரு. எம். நாயிக் இப்போது லண்டன் மின்சாரத் தொழில் நிலையத்தில் எஞ்சினியராகப் பணியாற்றுகின்றார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தி லுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.